
கோகுலம்

4-6-1978 விலை 60 காசு




பாபா சொன்ன பாப்பாக் கதை

ஜெம்ஸ் விளையாட்டை பாரீர்

1001 அதிர்ஷ்டப் பரிசுகளைப் பெறவேண்டும்!

விட்டுப்போன எண் எது?



முந்துங்கள்!

உங்கள் விடையை காலி செய்யப்பட்ட ஜெம்ஸ் பிளாஸ்டிக் பாக்கெட் ஒன்றுடன் இணைத்து அனுப்புங்கள். வெற்றி பெறும் முதல் 1001 பேர்கள் தலா ரூ. 11/- மதிப்புள்ள ஸ்டேட் பாங்க் அன்பளிப்புச் செக்குகளைப் பெறுவார்கள்.

உங்கள் பதில், பெயர் மற்றும் முகவரியை ஆங்கிலத்தில் மட்டுமே அதுவும் தெளிவான எழுத்துக்களில் எழுதுங்கள். நுழைவுத் தாள்களை இம் முகவரிக்கு அனுப்புக.

"Fun with Gems" Dept. B 36 Post Box No. 56,
Thane-400 601, Maharashtra.

நுழைவுத்தாள்கள் கிடைக்க வேண்டிய கடைசித் தேதி
ஜூன் 30, 1978

சாக்லேட் நிரம்பியுள்ள வண்ணமிகுந்த காட்பரிஸ் ஜெம்ஸ்

CHAITRA-C-161 TAM

மலர் - 6
ஜூன் 4, 1978

கோகுலம்

இதழ் - 7
காளயுக்தி - வைகாசி 21



அருமைச் செல்வங்களே!

உங்களையெல்லாம் பார்த்து ஒருவருடம் ஆச்சு. நீங்களும் உங்கள் அருமைக் கோகுலத்தைப் பார்த்து ஒருவருடம் ஓடிப் போச்சு. "'கோகுலம்' ஏன் திடீரென நின்றுபோனது; எப்படி நின்றுபோனது?" என்று உங்களையே நீங்கள் கேட்டுக் கொள்கிறீர்கள். அந்தச் சோகக் கதையை யெல்லாம் சொல்லி உங்களைக் கஷ்டப்படுத்த வேண்டாம். இப்போது கோகுலம் எதற்காக வருகிறது என்று கேளுங்கள். கேட்பானேன்? உங்களுக்காகத்தான்! கண்ணால் பார்க்காவிட்டாலும் இந்த ஒரு வருடத்தில் கோகுலமும் நீங்களும் பிரிந்திருக்கவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். 'என்றாவது ஒருநாள் புதிய கோகுலம் புனர்ஜென்மம் எடுத்து வரும்' என்ற மாறாத நம்பிக்கையுடன், பழைய கோகுலம் இதழ்களை யெல்லாம் நீங்கள் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததும் எங்களுக்குத் தெரியும். பழைய இதழ் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு முறை பார்க்கும்போதும் ஒரு புதிய புதுமையைக் கண்டு மகிழ்ந்திருக்கிறீர்கள். இனி புதிய கோகுலம் உங்களைத் தேடி வரும். கூடிய விரைவில் இறைவன் அருளால் வாரம் ஒரு முறை – சந்திக்கும் வாய்ப்பும் வரலாம். இப்போது வாழ்த்தி வரவேற்றுக் கடிதம் எழுதியிருக்கும் எல்லோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

புதிய கோகுலத்தில் என்னவெல்லாம் இருக்கும் என்று கேட்கிறீர்கள்; காதில் விழுகிறது. முன்பு வெளிவந்த கோகுலத்தில் இருந்த நல்லதெல்லாம் புதிய கோகுலத்திலும் இருக்கும். புதியதாகப் பல நல்ல அம்சங்களும் இருக்கும். கோகுலம் மூலமாகப் புனிதமான பெரியோர் பலரின் கனிமொழி ரசத்தை நீங்கள் பருகிப் பயன் பெறலாம். அடிக்கடி இருட்டிப் போகும் வாழ்க்கைப் பாதையில் உங்களுக்கு வழிகாட்ட ஒரு கை விளக்காக கோகுலம் என்றும் திகழும். உங்களுக்கு வேண்டியது என்ன என்று பார்த்துப் பார்த்துக் கொடுக்க நாங்கள் எப்போதும் தயாராகக் காத்திருப்பதுதான் உங்களுக்குத் தெரியுமே!

—ஆசிரியர்



தந்தை தாய்ப்பேண்

ஒவ்வொருவரும் தங்கள் தாய் தந்தையரை அவர்கள் ஆயுள் உள்ள வரை காப்பாற்ற வேண்டும். ஒவ்வொரு ஜீவனும் மோக்ஷம் அடைவதற்கு வழிகாட்டியாயுள்ள இந்தப் பிறவி எடுப்பதற்குக் காரணமாயுள்ளவர்கள் தாய் தந்தையர்களே! எவ்வளவு உயிரினங்கள் இருந்தாலும் மனிதப் பிறவி ஒன்றினால் தான், பிறவியில்லாப் பெரும் பேற்றை அடைய இயலும். அப்பேர்ப்பட்ட ஒரு மனிதப் பிறவியை அளித்த தாய் தந்தையர்களைத் தெய்வமாக நினைத்து அவர்களை ஆயுட்காலம் வரை காப்பாற்ற வேண்டும்.

உதாரணமாக, கண்ணில்லாத பெற்றோர்களுக்குச் சிரவணகுமாரன் என்று ஒரு பையன் இருந்தான். அவன் தாய் தந்தையர்களுக்கு வேண்டிய சகல பணிவிடைகளையும் விடாது செய்து வந்தான். ஒருநாள் ஜலம் எடுத்து வருவதற்காகக் குடத்தை எடுத்துக் கொண்டு நீர் நிலைக்குச் சென்றிருந்தான். அந்தச்சமயம் தசரத மகாராஜா வேட்டையாட அந்தக் கானகத்திற்கு வந்திருந்தான். ஒரு கரையில் சிரவணகுமாரன் ஜலம் எடுக்கக் குடத்தைத் தண்ணீரில் அமுக்கும்போது, குபுகுபு என்ற ஒரு சப்தத்தோடு ஜலமானது குடத்திற்குள் போயிற்று. அந்தச் சப்தத்தைக் கேட்ட தசரதன், யானைதான் ஜலம் அருந்த அந்தத் தடாகத்திற்கு வந்திருக்கிறதென்று நினைத்து, அந்த யானையை அடிக்கும் நோக்கத்துடன் அம்பு தொடுத்தான்; ஆனால் அந்த அம்பு சிரவணகுமாரன் உடம்பில் தைக்க அந்தப் பையன் இறக்கும் தருவாயில் இருந்தான். அப்பொழுது தசரதன் கிட்டச் சென்று பார்த்தபோதுதான், நாம் ஒருவன் உயிரைப் பறித்து விட்டோமேயென்று மனம் நொந்து போனான். சாகும் தருவாயிலிருந்த சிரவணகுமாரன் தசரதனிடம் ''என் தாய் தந்தையர்களோ பிறவிக் குருடர்கள். அவர்களுக்கு இனி யார் பணிவிடை செய்யப் போகிறார்கள்!'' என்று சொல்லி ஏங்கினான். அத்துடன் ''என் பெற்றோர்கள் என்னை எதிர்பார்த்த வண்ணமிருப்பார்கள். அவர்களுக்கு இந்த ஜலத்தைக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு நடந்த விஷயத்தையும் தெரிவியுங்கள்'' என்றும் கேட்டுக்கொண்டான். இந்தக் கதையிலிருந்து என்ன தெரிகிறது? சாகும் தருவாயிலும் சிரவணகுமாரன் தன் தாய் தந்தையருக்குப் பணி செய்யும் எண்ணத்தோடேயே இருந்தான் என்பது புலப்படுகிறது.

இரண்டாவதாக, கௌரவர்கள் எவ்வளவோ அதர்மமான வழியில் போயிருந்த போதிலும் தம் தாய் தந்தையர்களுக்கு ஒரு மரியாதை கொடுத்து அவர்களைக் கடைசி வரையிலும் காப்பாற்றி வந்தார்கள் என்று மஹாபாரதம் கூறுகிறது.

மூன்றாவதாக ஆதிசங்கர பகவத்பாதாள் தன் தாய் மீதுள்ள அன்பினால் தன் தாய் ஸ்நானம் செய்வதற்காகத் தொலைவிலிருந்த பூர்ணா நதியைத் தன்

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளியது

அறநெறி




தவ சக்தியினால் தம் வீட்டிற்கு அன்டையில் கொண்டு வந்தார். அத்துடன் தன் தாய் கொடுத்த வாக்குறுதியை மனத்தில் இருத்தி, தாயின் அந்திம காலத்தில் தன் தவ சக்தியினால் அவ்விடம் வந்து தாயின் இறுதிச் சடங்குகளைச் செய்து முடித்தார்.

இந்து சமயத்தில்தான் பெற்றெடுத்த குழந்தைகளைத் தாங்களே வளர்த்து, கல்வி போதிப்பதுடன்கூட நல்ல ஒரு குடிமகனாக்கி, பிற்காலத்தில் தாய் தந்தையர்களைக் காப்பாற்றுகிற பண்பையும் கற்றுக் கொடுக்கிறார்கள். மேலும் இறந்த பிறகும் அந்தத் தாய் தந்தையர்கள் உயிர்கள் நல்ல நிலையில் இருப்பதற்கு பிதுர் கடன்களைச் செய்வித்து வருகிற வம்சங்களைத் தயார் ஆக்குகிறார்கள்.

இதையேதான் ஔவையார் ஓரிடத்தில் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென்று சொல்லியிருக்கிறார்கள். தன் வாழ்நாளிலே முன்னால் அறிந்து கொள்ள வேண்டியது தாயும் தந்தையுமே! தந்தை சொல் மிக்க மந்திரமில்லை யென்பதும் இதே கருத்தைத் தான் வலியுறுத்துகிறது.

உதாரணமாக பரசுராமர் தாய் தந்தையர்களைத் தெய்வமாக நினைப்பவர். ஒருநாள் பரசுராமர் தந்தை ஜமதக்னி முனிவர் தன் பிள்ளைகளை ஒவ்வொருவராகக் கூப்பிட்டு, ''என்னுடைய தாய் சிறு தவறு செய்துவிட்டாள். அதனால் அவளைக் கொன்று விடு'' என்று கோபத்தில் சொல்லி விட்டார். அப்பொழுது பரசுராமர் ஒருவரைத் தவிர மற்ற எந்த ஒரு மகனும் அந்தச் செயலைச் செய்ய முன் வரவில்லை. ஆனால் பரசுராமர் மட்டும் தந்தை வார்த்தையை மதித்துத் தம் தாயைக் கொன்றார். இதைப் பார்த்த ஜமதக்னி பரம சந்தோஷமெய்தி பரசுராமரைப் பார்த்து உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். ஆனால் பரசுராமரோ தாம் செய்த அந்தச் செயலைமறந்து தம் தாய் உயிர்பெற்று எழ வேண்டுமென்று கேட்டார். அவர் விருப்பப்படியே ஜமதக்னியும் தன் தவ சக்தியினால் ரேணுகா தேவியைத் திரும்ப உயிர் பெற்று எழச் செய்தார். இந்த வரலாற்றிலிருந்து பரசுராமர் தந்தையின் சொல்லுக்கு எவ்வளவு மதிப்பு வைத்திருந்தானோ அதே அளவுக்குத் தாயிடமும் பக்தி கொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது.

இரண்டாவதாகக் கசாப்புக் கடை வியாபாரம் செய்யும் தர்மவியாதன் என்பவன் ஜீவனத்திற்காக மாமிச வியாபாரம் செய்து வந்த போதிலும் தன் தாய் தந்தையர்களை வாழ்நாள் முழுதும் தெய்வமாகவே நினைத்து அன்புடனும் கடமை உணர்ச்சியுடனும் நடந்து வந்தான். அதன் மூலம்



காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா!



நீங்கள் இங்கே காண்பது ஒரு நடமாடும் விளையாட்டு மைதானம். இந்த விளையாட்டு மைதானத்தில் குழந்தைகள் பெரியவர்கள் எல்லோருமே விளையாடி மகிழலாம், தாவி ஏறலாம், ஏறிக் குதிக்கலாம், படுத்து உருளலாம், சறுக்கி விழலாம். உடலில் காயம் ஏதும் படாமல் இத்தனையையும் செய்யலாம். காற்றடைத்த இந்த பிளாஸ்டிக் மெத்தையில் பல வண்ணங்களிலும் அமைப்பிலும் இந்த ராட்சசப் பொம்மையை (20 மீட்டர் நீளம் 4 மீட்டர் உயரம்) உருவாக்கி விருப்பவர் லாஸ் கோரிங் (Klaus Gohring) என்ற பெர்லினைச் சேர்ந்த ஜர்மானியர். அலங்காரப் பொருள்களையும் வீட்டை அழகு படுத்துவதிலும் வல்லவரான இவர் ஆரம்பத்தில் போலீஸ்காரராக வாழ்க்கையைத் தொடங்கினார். இவருடைய இந்தப் புதிய பிளாஸ்டிக் விளையாட்டு மைதானத்துக்கு ஏகமான வரவேற்பாம். இருக்காதா பின்னே? எங்குவேண்டுமானாலும். இதை நிறுவி விளையாடி மகிழலாமே!

உதவி: ஜெர்மன் ஃபீசர்ஸ்

அவன் முக்காலமும் உணர்ந்த, ஒரு ஞானியுமாயினன் என்ற கதையுமுண்டு.

மூன்றாவதாக யயாதி என்னும் மன்னனுக்கு நிறையப் பிள்ளைகள் உண்டு. இருந்தபோதிலும் ''புரு'' என்ற ஒரு பையன் மாத்திரம் தந்தைக்காகத் தன் யௌவனத்தையே தியாகம் செய்தான்.

தாய் தந்தையர்களை வழிபட்டு, அவர்கள் ஆசியால் முன்னுக்கு வந்தவர்கள் உலகில் நிறைய உண்டு. தற்காலத்தில் இறைவனை ஒத்துக் கொள்ளாதவர்கள்கூட தாய் தந்தையர்களைப் பேணிக் காத்து அவர்கள் ஆசி பெற்று வருகிறார்கள்.

ஆகையினால் நாமும் நம் தாய் தந்தையர்களிடம் நேசத்துடனும்— பாசத்துடனும்— விஸ்வாசத்துடனும் இருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டியது நம் கடமை!



ஒரே விடை!

கி. வேலாயுதம்

பொன்னென்று சொன்னாரே ஒருவர்
பொல்லாத வாளென்றார் ஒருவர்
மின்னென்று சொன்னாரே ஒருவர்
மீளாத பொருளென்றார் ஒருவர்
கண்ணென்று சொன்னாரே ஒருவர்
காற்றடி என்றாரே ஒருவர்
என்னென்று சொல்வாயோ தம்பி!
ஏற்கின்ற விடையிங்கே ஒன்றே!

பரியென்று சொன்னாரே ஒருவர்
படகென்று சொன்னாரே ஒருவர்
குரங்கென்று சொன்னாரே ஒருவர்
கனமான கல்லென்றார் ஒருவர்
அரவென்று சொன்னாரே ஒருவர்
அழகுமலர் என்றாரே ஒருவர்
அறிவாயா அறிவுள்ள தம்பி!
அனைத்திற்கும் விடைமட்டும் ஒன்றே.

விடை: 1. காலம். 2. மனம்

ஆற்று மணல்

ஆற்றங் கரைக்குச் சென்றுநாம்
அழகு வீடு கட்டலாம்!
நேற்று செய்த வீட்டினை
நின்று கொஞ்சம் பார்க்கலாம்!

ஊற்று ஒன்றைத் தோண்டியே
ஊறும் நீரைச் சேர்க்கலாம்!
போற்றுகின்ற தென்றலைப்
பொழுது போக்கி வாங்கலாம்!

ஓடி ஆடி மகிழவே
ஒன்றாய் அங்கே கூடலாம்!
நாடி வந்த தம்பியை
நாமும் சேர்த்துக் கொள்ளலாம்!

சொகுசாய்ப் படுத்துக் கொண்டுநாம்
சோர்வைப் போக்கிப் பேசலாம்!
வகுப்பில் நடந்த பாடமும்
வகையாய்க் கலந்து கொள்ளலாம்

நல்ல கதைகள் பேசியே
நாளை வாழ்வை வெல்லலாம்!
மெல்லக் களைப்பு நீங்கிடும்
மெதுவாய் வீடு சேரலாம்.

நாகரத்தினம்

பரமன் சொன்ன



கடவுளுடைய அருளைப் பெற்று எப்போதும் இன்பமாக இருப்பதற்குப் பணிவு ஒன்றுதான் வழி. எவ்வளவு பலம், பணம், படிப்பு முதலியன இருந்தாலும் பணிவு இல்லாவிடில் பகவானுடைய அருளைப் பெற முடியாது. மிகவும் உயர்ந்த பக்தர்களும் அவ்வப்போது பணிவை இழந்து கர்வத்துக்கு ஆளானதுண்டு. அச்சமயங்களில் இறைவனே அவர்களுக்குப் பாடம் கற்பித்து அதன் மூலம் உலகுக்கெல்லாம் படிப்பினை புகட்டியிருக்கிறார்.

* * *

வைகுண்டத்தில் மஹாவிஷ்ணுவுக்கு வாகனமாக உள்ள கருடன், மஹாவிஷ்ணு கிருஷ்ண பரமாத்மாவாக அவதரித்த காலத்திலும் துவாரகைக்கு வந்து அவருக்குப் பணிபுரிந்து வந்தான்.

இந்தக் கருடனுக்கும், ஒரு சமயத்தில் கர்வம் தலைதூக்கியது. 'உலகத்தையெல்லாம் பகவான் தாங்குகிறார் எனில், அந்தப் பகவானையும் நாம் தானே தாங்கிக்கொண்டு பறக்கிறோம்?' என்ற செருக்கு கருடனுக்கு ஏற்பட்டது.



மாயக் கண்ணனார் இதைக் கவனித்ததும் கவனிக்காததுபோல இருந்தார். எந்தச் சமயத்தில் எதைச் செய்யவேண்டும் என்று அழகாகத் திட்டம் போட ஸ்வாமிக்குத் தான் தெரியும். அந்தச் சமயம் வரும்வரையில் தாம் ஒன்றும் அறியாதவர் போல நடிப்பார்!

மஹாவிஷ்ணுவின் பத்தினிகளான ஸ்ரீதேவியும் (லக்ஷ்மியும்) பூதேவியும் கிருஷ்ணாவதாரத்திலும் அவருக்கு மனைவிகளாக அவதரித்திருந்தனர். லக்ஷ்மி ருக்மிணியாகப் பிறந்திருந்தாள்; பூதேவி ஸத்யபாமாவாகப் பிறந்திருந்தாள்.

பூதேவி தான் பூமாதேவி. பூமாதேவியின் அவதாரமான பாமா தேவிக்கும் கருடனைப் போலவே கர்வம் உண்டாயிற்று. 'நாம் தானே எல்லாவற்றையும் தாங்குகிறோம்? அதனால் நம்முடைய சக்தி தான் பெரியது. நாம் தாங்கித் தரிக்கும் மக்களுக்குச் செல்வம் தருவது மட்டும் தான் லக்ஷ்மியின் (ருக்மிணியின்) காரியம். அது பெரிய சக்தி இல்லை' என்று பாமா கருதினாள்.

குறும்புப் பிரியரான கண்ணனும் ருக்மிணியை விட பாமாவிடமே தாம் அதிக அன்பு கொண்டிருப்பது போல் நடித்து வந்தார்.

கருடன், ஸத்யபாமா இருவரின் கர்வமும் நன்றாகத் தலைக்கேறி உச்சத்தை அடைகிற வரையில் சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கிருஷ்ண பரமாத்மா அந்த உச்சகட்டம் வந்தவுடன் ஹநுமானையே நினைத்தார்.

தேக பலம், புத்தி பலம், மனோபலம், வாக்கு வன்மை, நன்னடத்தை எல்லாவற்றிலும் தலைசிறந்தவராக ஹநுமார் இருந்தபோதிலும் இறைவனுக்கு முன் பணிவே உருவமாக, ஊழியர்களுக்குள் கடைசி ஊழியராக இருப்பவர். அதனால் இந்தக் கர்வக்காரர்களுக்கு நல்லறிவு புகட்ட வேண்டுமென்று பகவான் நினைத்தபோது ஹநுமானையே எண்ணினார்.

ஹநுமான் துவாரகாபுரியின் வெளி எல்லையிலிருந்த ஒரு தோப்பிலே தோன்றி, அங்குள்ள பழங்களை உதிர்த்தும் மரங்களை முறித்தும் ரதாஹதம் செய்தார்.

தோப்பின் காவல்காரர்களாலும், மற்ற மக்களாலும் அவரை அடக்க முடியவில்லை.

பாப்பாக் கதைகள்

அவர்கள் கண்ணனிடம் வந்து முறையிட்டனர்.

கண்ணன் கருடனைப் பார்த்துச் சிரித்தார். ''கருடா, மகா பலசாலியான நீ இருக்கக் கவலை ஏன்? நீ படைகளோடு போய்ஹநுமானை அடக்கி, நம் நகர எல்லைக்கு அப்பால் துரத்தி விட்டு வா'' என்றார்.

''ஓ! இது ஒரு பெரிய காரியமா? அந்தக் கிழக் குரங்கை விரட்டப் படை எதற்கு? நானே போய் நொடியில், அதன் கொட்டத்தை அடக்கி விட்டு வருகிறேன்'' என்று கருடன் வீறாப்புடன் பேசி விட்டுப் புறப்பட்டான்.

ஆனால் அங்கே தோப்பில் வானத்துக்கும் பூமிக்குமாகப் பெரிய உருவம் எடுத்துக் கொண்டு நின்ற ஹநுமானைத் தொலைவிலிருந்து பார்த்த் போதே கருடனுக்கு நடுக்கமெடுத்து விட்டது.

ஒரு பெரிய மரத்தைப் பூச்செண்டு போலப் பறித்து ஹநுமான் இப்படியும் அப்படியுமாக வீசிற, அந்தக் காற்றின் வேகத்தை எதிர்த்துக் கொண்டு அவரை நெருங்குவதற்கே கருடனால் இயலவில்லை.

'தப்பினோம் பிழைத்தோம்!' என்று ஊருக்குத் திரும்ப ஓடி வந்த கருடன் மிகுந்த அவமானத்துடன் கண்ணனின் சபையை அடைந்தான்.

ஒன்றும் தெரியாதது போல் பகவான் ''ஆஞ்ஜநேயனை அடித்துத் துரத்தி விட்டாயல்லவா?'' என்று கேட்டார்.

கருடன் தலைகுனிவுடன், ''இல்லை ஸ்வாமி! அந்த வானரத்தை நெருங்கவே· எனக்குச் சக்தி இல்லை. அதனால் முதலிலேயே தாங்கள் சொன்னாற் போல் சைனியத்தை உடனழைத்துப் போகவே வந்தேன்'' என்றான்.

''ஸந்தோஷம். படைகளையும் அழைத்துப்போய் வெற்றி வீரனாகத் திரும்பி வா. நீ ஒருவனாகவே ஹநுமானை வென்று விட முடியும். ஆனாலும் அவர் பெரிய ராமதாஸராயிற்றே என்பதால் அவரிடம் கடுமையாகப் போரிட உனக்கு மனம் வரவில்லை போலிருக்கிறது. அதனால்தான் படையைஅழைத்துப் போகிறாய்'' என்றார், எல்லாம் தெரிந்தும் தெரியாதவராக நடித்த கிருஷ்ண பகவான்.

ஸ்வாமிக்கு இப்படி வேடிக்கை செய்வது சுபாவம்!

கருடன் பெருத்த சேனாபலத்தோடு ஆஞ்ஜநேயரை எதிர்க்கச் சென்றான்.



ஆனால் ஆஞ்ஜநேயன் 'அவர்களைப்' பார்த்து 'ஹூம்' என்று மூச்சுவிட்ட வுடனேயே அவர்கள் புயலில் அகப் பட்ட பஞ்சைப் போல, அந்த மூச்சுக் காற்றினால் தள்ளப்பட்டு, துவாரகைக் குள் வந்து விழுந்தனர்.

மறுபடியும் யுத்தத்துக்குப் புறப்பட் டனர்.

ஹநுமானும் வேடிக்கைக்காகச் சிறிது போர் புரிவது போலக் காட்டினார்.

முடிவில் கருடனும் அத்தனை போர் வீரர்களும் தோற்று விழுந்தனர்.

இவர்கள் யாவரும் சொந்தமாகத் தங்களுக்கே பலம் உண்டு என்று நினைத் தவர்கள்! ஹநுமானோ தமக்கென்று தனியாக பலமே கிடையாது, 'ராம ராம' என்று பகவானின் நாமத்தைச் சொல்லிக் கொண்டிருப்பதே தமக்கு பலமூட்டுவது என்று உணர்ந்து, எப் போதும் ராம நாம ஜபம் செய்து, கொண்டிருப்பவர். ''ஸ்ரீராம் ஜய ராம் ஜய ஜய ராம்'' என்று ஜபித்துக் கொண்டே அவர் எந்தக் காரியமும் செய்வார். யுத்தம் செய்யும் போதும் இந்த ஜபத்தை அவர் விடமாட்டார். 'ஜய ராம்' அவருக்கு எப்போதும் ஜயத் தைக் கொடுத்தார்!

தோற்ற படைகளோடு கருடன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு கண்ணனை அடைந்தார்.

''என்ன கருடா? 'வயதானவரும், ராமதாஸருமான ஆஞ்ஜநேயனைத் தோல்வியடையும்படி செய்து விட் டோமே' என்ற வருத்தத்தோடு வரு கிறாயா?'' என்று வெளியில் கிண்ட லாகத் தோன்றுமலே, கிண்டல் செய் தார் பகவான்.

கருடன் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்தான்.

''பிரபு! என் கர்வத்துக்கு நல்ல பாடம் கற்பித்து விட்டீர்கள். இது அவ் வளவும் தங்கள் லீலைதான். இனிமேலும் நான் இப்படி செருக்கு அடையாதபடி தாங்கள் தான் காத்தருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தான்.

குற்றம் உணர்ந்து வேண்டுபவர் களை உடனே மன்னித்து அருள்வது ஸ்வாமியின் குணம்.

ஆகையால் கருடனை மன்னித்துவிட் டார்.

கண்ணனுக்கு அருகில் அமர்ந்திருந்த ஸத்யபாமா, ''அப்படியானால் இந்த ஹநுமானை அடக்குவதற்கு வழியே இல்லையா? எனக்கு அவரைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறதே! எவ் வாறேனும் அவரை அடக்கி இங்கே வர வழைக்க வழி செய்யுங்களேன்!'' என்று கண்ணனிடம் கேட்டுக் கொண்டாள்.

''அம்மா ஸத்யபாமா! போர்செய்து ஆஞ்ஜநேயனை அடக்குவது என்பது திரிமூர்த்திகளாலும் முடியாத காரி யம். ஆம், மஹாவிஷ்ணுவால் கூட மஹாவிஷ்ணு ரூபத்தில் சென்று ஹநு மானை அடக்க முடியாது; என்னா லும்கூட இந்தக் கிருஷ்ண ரூபத் தில் ஆஞ்ஜநேயனை வெற்றி கொள்ள இயலாது. திருமாலின் ஸ்ரீராம வடிவம் ஒன்றிலேயே ஹநுமான் இறைவனின் சக்தியைத் தம்முள் பெற்றிருக்கிறார். எனவே, ஸ்ரீராமன் ஒருவருக்கே அவர் கட்டுப்படுவாரே யன்றி, எனக்கும் கூடக் கட்டுப்பட மாட்டார்.

''ஆகவே நான் கண்ணனாக இருந்து கொண்டு உத்தரவு போட்டோ, சண்டை செய்தோ ஹநுமானை இங்கு வரவழைக்க முடியாது. ஆனால் நான் ராம ரூபத்தை எடுத்துக் கொண்டு ஒரு வார்த்தை கட்டளையிட்டு விட்டால் போதும், உடனே மாருதி அடக்க ஒடுக் கத்துடன் ஓடோடி வந்துவிடுவான். ஆகையால் உன் விருப்பத்தை நிறை வேற்ற இவ்விதமே செய்கிறேன்'' என் றார் கண்ணன்.

''ஆஞ்ஜநேயனின் கண்களுக்கு நான் ராமனாகவே காட்சியளிப்பேன். ஆனால் இதுமட்டும் போதாது. 'அவன் ராம ருடன் ஸீதா தேவியையும் காணவிரும் புவான். கற்பரசியான ஸீதையின் இரு உருவை அவன் இங்கு காண என்ன வழி?'' என்று கண்ணன் கேட்டார்.

ஸத்யபாமா பரிகாசமாகச் சிரித் தாள். ''இதென்ன பெரிய பிரச்னை? ஸீதையாகக் காட்சி கொடுப்பதுஎனக்கு ஒரு பெரிய காரியமா என்ன? தங் களையே வசப்படுத்திக்கொண்டு விட்ட என்னால் முடியாதது எது? ஸீதை என்னில் பெரியவளா என்ன? ருக்மிணி யால் ஸீதையின் உருவத்தை எடுத்துக் கொள்ள முடியாதே தவிர எனக்கு அது ஒரு பொருட்டில்லையே!'' என்று இறு மாப்புடன் கூறினாள்.

''ஆமாம், ஆமாம்'' என்று தலை யாட்டினான் கள்ளக் கண்ணன்.

கருடனைப் பார்த்து ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா '' ஹநுமானிடம் சென்று, 'ஸ்ரீராமர் துவாரகைக்கு வந்திருக் கிறார். தங்களை வரச் சொல்லிக் கட் டளை இட்டிருக்கிறார்' என்று கூறி அழைத்து வா'' என்றார்.

கருடன் ஹநுமானிடம் போகவே அஞ்சினான்.

''ராம நாமத்தை உரக்கக் கோஷித் துக்கொண்டே போ. உன்னை ஆஞ்ஜ நேயன் ஒன்றும் செய்ய மாட்டான்''

○ சென்னை கொத்தவால் சாவடி 1820ல் கட்டப்பட்டது. சிறிதும் பெரிதுமான சுமார் 2500 கடைகள் இங்கு உள்ளன. இதன் விஸ்தீரணம் 50 ஏக்கர்.

○ சென்னையில் முதல் முதலாக பிரசுரிக்கப்பட்ட ஆங்கில தினசரி இந்தியன் சூரியர். 1785-ம் வருஷம் அக்டோபர் 1 ந் தேதி பிரசுரமானது.

○ நியூயார்க்கில் ராமாயணா ரெஸ்டாரண்ட் என்று இருக்கிறது. இங்கு இந்தோனேஷியா உணவு பரிமாறப்படுகிறது

○ ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைகழகத்தில் கீழ்நாட்டு வேதாந்தத்தைப் போதித்தவர் பாரதத்தின் முன்னாள் ஜனாதிபதியான டாக்டர் ராதாகிருஷ்ணன்.

என்று தைரியம் கொடுத்தார் கிருஷ்ண பகவான்.

கருடன் அவ்விதமே ராம நாமத்தைக் கூவியபடி சென்றான். வீரதீர பராக்ரம சாலியான ஆஞ்ஜநேயர்ன் ஸ்ரீராமரின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் பெட்டிப் பாம்பாக அடங்கி, தலை மேல் கை குவித்துக் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் அருவியாக வழியக் கருடனை அன்போடு வரவேற்றார்.

'இது அல்லவா பக்தி! இப்படியே பணியாலேயே அல்லவா இவர் தேவர்களையும் மீறிய சக்தி பெற்றிருக்கிறார்? பக்தி பலம் இல்லாமல் வெறும் தேக பலத்தை மட்டும் பெரிதாக எண்ணியதால்தானே நாம் தோல்வி யடைந்தோம்?' என்று கருடன் நல்லறிவு பெற்றார்.

ஹநுமானை வணங்கி, ''ஸ்ரீராமபிரான் துவாரகைக்கு எழுந்தருளியிருக்கிறார். தங்களை வருமாறு....'' என்று கருடன் கூறிமுடிப்பதற்குள்ளேயே, ஹநுமான் ''என் பிரபு வந்திருக்கிறாரா? இதோவருகிறேன்'' என்று புறப்பட்டு விட்டார்.

கண்ணனின் தர்பார் மண்டபத்தை அடைந்தார்.

கிருஷ்ண பரமாத்மா ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியாகவே ஆஞ்ஜநேயரின் கண்களுக்குக் காட்சி கொடுத்தார்.

அவரது திருவடித் தாமரைகளில் வணங்கி எழுந்த ஹநுமார், அவருக்குப் பக்கத்தில் நின்ற ஸத்ய பாமாவைக்கண்டதும் திடுக்கிட்டார்.

''ராமசந்திர பிரபு? இதென்ன ஒரு பிசாசு வடிவம் தங்கள் பக்கத்தில் காணப்படுகிறது? என் அன்னை ஸீதா தேவி இருக்க வேண்டிய இடத்தில் இந்தக் கோர ஸ்வரூபத்தை வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, இது என்ன விபரீதம்?'' என்று பதைபதைப்புடன் கேட்டார்.

ஸத்யபாமாவுக்கு ஒரே அவமானமாகிவிட்டது! அவள் ஸீதையின் வடிவத்தை எடுத்துக்கொள்ள எவ்வளவோ முயன்ற போதிலும் அது முடியாமற் போனது மட்டுமின்றி, தன்னுடைய இயற்கையான அழகிய ஸத்யபாமா உருவில் கூட இல்லாமல் பேய் வடிவில் மாருதியின் கண்ணுக்குத் தெரிய நேர்ந்ததில் வெட்கிக் கூசினாள்.

விஷமக் கண்ணனோ, ''என்ன இப்படி எல்லாம் பேசுகிறாய் ஆஞ்ஜநேயா? இது என், ஸீதைக்கும் மேலே!'' என்றார்.

மீண்டும் அவளைப் பார்த்த மாருதியோ ''சை! இதுவா என் தாய்?'' என்று வெறுப்போடு கூறியபடி, அங்கு நிற்கவே முடியாதவர் போல ஓடப் பார்த்தார்.

குமிழியை நன்றாக ஊதிப் பிறகு உடைக்கும் பகவான், ''மாருதி! அப்படியானால் இந்த ஸபையில் ஸீதா தேவி வேறெங்கேனும் இருக்கிறாளா என்று தேடிப் பாரேன்'' என்றார்.

அவ்விதமே அங்கு கூடியிருந்த மாதரிடையே தேடிப் பார்த்த மாருதி, தொலைவில் ஓர் ஓரத்தில் அடங்கிஒடுங்கி நின்று கொண்டிருந்த ருக்மிணியைப் பார்த்தார்.

பார்த்ததுதான் தாமதம்! உடனே அவருக்கு மயிர்க்கூச்சு எடுத்தது.

''என் அம்மா ஸீதாதேவி!'' என்று ஆவேசத்துடன் அழைத்தபடி ருக்மிணியைச் சென்றடைந்து அவளுடைய பாத கமலங்களில் பணிந்தார்.

ருக்மிணி ஸீதையின் உருவத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கக்கூட இல்லை. ஆனால் அவளுடைய பணிவுக் குணத்தின் உயர்வைக் காட்டுவதற்காகக் கண்ணனே இப்படி ஒரு நாடகம் நடத்திவிட்டான்!

தன் காலில் விழுந்த ஹநுமானைப் பார்த்து ருக்மிணி தேவி, ''மஹா உத்தமியான ஸீதாதேவி எங்கே? அல்பப் பெண்ணான நான் எங்கே? என்னை ஸீதையாகச் சொல்லலாகுமா? அதுவுமின்றி, எல்லாத் தெய்வங்களுக்கும் செய்யப்படும் நமஸ்காரங்களையெல்லாம் ஏற்கும் கேசவர் (கண்ணன்) இங்கிருக்கும் போது, அவரது அடிமையான என்னை நமஸ்கரிக்கலாமா?' என்று விநயத்துடன் கேட்டாள்.

ஸத்யபாமாவுக்கும் நற்புத்தி பிறந்தது! தேவர்களும், அவதாரங்களும் கூட இறுமாப்புக் கொண்டால் இறைவனருள் போய்விடும், தெய்வாம்சம் நீங்கி விடும் எனக் காட்டினார்.

மர்ம மாளிகையில் பலே பாலு — 7 — வாண்டு மாமா
சித்திரம்: செல்லம்




இப்போது நடந்தது போலச் சுற்றுலாப் பயணிகளுக்கு நேருமானால் இந்தத் தீவுக்கு ஈ காக்கை வராது.
இந்த மலைப் பாதையின் ஒரு பக்கத்துக்கு வேலி அமைத்துவிட வேண்டியது தான்.
மிஸ்டர் ரவி, இந்தத் தீவிலேயே உங்கள் மாமாவுக்கு மிகவும் பிடித்த இடத்தைக் காட்டுகிறேன்.
ஆவலைத் தூண்டுவதாக இருக்கிறது உங்கள் பேச்சு.
வெறும் சதுப்பு நிலமல்லவா இது?
ஆமாம், ஆனால் காட்டு வாத்துக்களும் காடை கவுதாரி போன்ற விதவிதமான பறவைகளும் இங்குள்ளன. மாமா தினமும் பல மணி நேரங்களை இப்பறவைகளைப் பார்த்தபடியே இங்கு கழிப்பார். கவனமாக என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள்.
...ஆனாலும் இந்தத் தீவிலேயே இந்த இடம் தான் அபாயமான பகுதி.
நீங்கள் தமாஷ் செய்கிறீர்களா மகேஷ் பாபு?
இது பறவைகளின் சரணாலயம் போலிருக்கிறதே. விதவிதமான காட்டுவாத்துக்கள்.
பறவைகளைப் பார்த்தபடியே நடந்து கொண்டிருந்த ரவியும் பாலுவும் திரும்பிய போது மகேஷ் பாபுவைக் காணவில்லை. அப்போது அந்தச் சதுப்பு நிலத்தில் பனிமூட்டம் கவிய ஆரம்பித்தது.
மகேஷ் பாபு! எங்கிருக்கிறீர்கள்?
உங்களுக்கு முன்னால் தான். என் குரலைக் குறி வைத்தபடி வாருங்கள் — மூடுபனி!
ஆனால் அவர்கள் முன்பாக...
அதோ அது... பளிச்சென்று வட்டமாக... அது பறக்கும் தட்டா?
ரவி.... அது....? ஆமாம் நீ நினைக்கிறபடியே நானும் நினைக்கிறேன். பறக்கும் தட்டுதானா அது?

தொடரும்

கிரிப்பட்டணக் கதை!

V. உஷா

“பாட்டி! சும்மாச் சும்மா காக்காக் கதை கேட்டு அலுத்துப்போச்சு. வேறே நல்ல கதை சொல்லு!''

''அப்படியா! இன்னிக்குப் புதுக் கதை சொல்றேன் கேள்.

முன்னொரு காலத்தில் கிரிப்பட்டணம் என்று ஓர் ஊர் இருந்தது. அந்த ஊர் ராஜாவுக்குக் 'கண்மணி' அப்படின்னு ஒரு பெண். ராஜகுமாரி கண்மணி ரொம்பச் செல்லமா வளர்ந்தா. தினமும் சாப்பிட லட்டு, மிட்டாய், ஜிலேபி தான்.

அந்த ராஜகுமாரிக்கு ஏழு வயது ஆனபோது ஒரு மாறுதல் ஏற்பட்டது. தினமும் மகிழ்ச்சியாக ஓடி ஆடுபவள் சோர்ந்து உட்கார்ந்துட்டா. நாளடைவில் மாலை நேரமானால் கண் சரிவரத் தெரியவில்லைன்னு அப்பாகிட்டே அழுதுகொண்டே சொன்னா. இதனால் ரொம்பக் கவலைப்பட்ட ராஜா, எல்லா வைத்தியர்களையும் கூப்பிட்டு வைத்தியம் செஞ்சார். ஆனால், ஒண்ணும் பலன் அளிக்கல்லே.



அப்புறம், காட்டிலே தவம் செய்யற முனிவர்கிட்டே போய்த் தம் கவலை தீர வரம் கேட்கலாம்னு தம் பரிவாரத்துடனும், மகள் கண்மணியுடனும் காட்டுக்குப் போனார். காட்டிலே ரொம்ப தூரம் வந்த களைப்புப் போக எல்லோரும் ஒரு குளத்தின் கரையில் தங்கினார்கள். அப்போ, கொஞ்சத் தொலைவிலே ஒரு சிறுவன் ரொம்ப உயரமான மரத்தில் இருக்கிற மாம்பழங்களை அம்பினாலே சுலபமா அடிக்கிறதைப் பார்த்த ராஜா அந்தப் பையனை அழைச்சிட்டு வரத் தம் வீரர்களை அனுப்பினார்.

சில மாம்பழங்களைக் கொண்டுவந்து ராஜாகிட்டே தந்து சிறுவன் வணங்கினான். ராஜா, அந்தச் சிறுவனுடைய பார்வை அவ்வளவு தெளிவாக இருக்கிற காரணத்தைக் கேட்டபோது அவன் அதற்குத் தன் பாட்டிதான் பதில் சொல்ல முடியும் என்றும், அவள் வீடு மிக அருகிலேயே இருப்பதாகவும் சொன்னான்.

அந்தச் சிறுவன் ராஜாவை அழைச்சுக்கிட்டுத் தன் வீட்டுக்குப் போனான். பாய் விரித்தாற்போலப் பசுமையான பாத்திகளுக்கு நடுவே அமைந்திருந்த அழகான சிறு குடிசை. ராஜா வருவதை வெகுதூரத்திலிருந்தே அடையாளம் கண்டுகொண்ட பாட்டி, ராஜாவையும், ராஜகுமாரியையும் வரவேற்றாள். ராஜா அந்தப் பாட்டியிடம் தம் மகளுடைய கதையைச் சொன்னார். அதற்குப் பாட்டி, தன்னால் முடிந்ததைச் செய்வதாகவும், விருப்பமானால் ராஜகுமாரியைத் தன்னிடம் சிறிது காலத்துக்கு விட்டுச் செல்லும்படியும் கூறினாள்.

ராஜகுமாரியும் மிக்க மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவிக்கவே, அரசனும், ராஜகுமாரியை அங்கேயே விட்டுவிட்டு அரண்மனைக்குத் திரும்பினார்.

ராஜகுமாரிக்குக் காட்டு வாழ்க்கை ரொம்பப் பிடிச்சது. பாட்டி வேளைக்கு வேளை சமைத்துள்ள சத்துள்ள, சுவையான சாப்பாட்டை ரொம்பப் பிரியமாகச் சாப்பிட்டாள். நாள் முழுதும்

சிறுவனுடன் காட்டிலே ஓடியாடி விளையாடினாள். அந்தச் சிறுவன் சந்திரனும், அவளுக்கு வில் வித்தை சொல்லிக் கொடுத்தான்.

இப்படியே கொஞ்ச காலத்தில், பாட்டி கொடுத்த சத்துணவினாலே ராஜகுமாரியின் பார்வை நல்ல ஒளி பெற்றுக் குணமாயிடுச்சு. சிலகாலம் கழித்து, ராஜா தம் மகளை அழைச்சிட்டுப் போக வந்தார். அப்போது, ராஜகுமாரி கண்மணியும் சந்திரனைப் போலவே வெகு சாமர்த்தியமாக உயரத்தில் மரங்களிலுள்ள பழங்களை அம்பினால் வீழ்த்துவதையும் அவள் கண்கள் நன்றாகக் குணமானதையும் பார்த்து ரொம்ப சந்தோஷப்பட்டார்.

உடனே பாட்டியிடம் தம் சந்தோஷத்தைத் தெரிவித்து மகளைக் குணப்படுத்தின மந்திர சக்தி என்னென்னு கேட்டார். அதற்கு அந்தப் பாட்டி, தான் தயாரித்துள்ள சாப்பாடுதான் ஆரோக்கியத்தைக் காப்பாற்றியது. அதுதான் மந்திரம் அப்படீன்னா. ராஜாவுக்கு ஆச்சரியமாகப் போச்சு! அப்போ பாட்டி, தன் வீட்டைச் சுத்தி இருக்கிற கீரைப் பாத்தி, காய்கறித் தோட்டத்தைக் காட்டினாள். அந்தத் தோட்டத்திலிருந்து தான் தினமும் கீரை வகைகள், பச்சைக் காய்கறிகள், மாம்பழம், பப்பாளி போன்ற பழங்களைச் சாப்பாட்டிலே சேர்த்துக்கிறதாகச் சொன்னாள்.


கண்ணுக்கு ஒளி தருகிற மந்திர சக்தி கீரைகளிலேதான் இருக்குன்னு ராஜாவுக்குப் புரிஞ்சுபோச்சு. உடனே ராஜா, தம் அரண்மனையிலும், தம் நாட்டு மக்கள் எல்லோர் வீடுகளிலும், கீரை பயிரிட வேண்டும் என்றும், தினசரி உணவில் கீரையை அவசியம் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், கோரினார். தமது நாட்டில் கண் பார்வை மங்கினவர்களே இல்லாமல் செய்ய வேண்டும் என்றார். அன்று முதல் கிரிப்பட்டணம் 'கீரைப் பட்டணம்' என்று வழங்கப் படும்னு உத்தரவு போட்டார்.

ராஜாவும், ராஜகுமாரியும் பாட்டிக்கும் சந்திரனுக்கும் நன்றியைத் தெரிவிச்சிட்டுக் கீரைப்பட்டணம் போய்ச் சேர்ந்தாங்க.''

''பாட்டி! இது நிஜக்கதை தானே? அப்போ, அந்தக் கதையிலே வர்றது என்ன மந்திரம்–கீரை மந்திரம்?''


''ஓ....அதுவா? அந்த மந்திரம்தான் வைட்டமின் 'ஏ'. நாம எல்லோரும் தினமும் கீரை சாப்பிட்டால் கண் நல்லாத் தெரியும். கண்ணு போனா எல்லாம் போச்சு. பார்வை தெளிவாஇருக்கணும்னா மந்திர சக்தி –வைட்டமின் 'ஏ' சத்து வேணும். அதுக்குத் தினமும் கீரை வகைகளையும், பச்சைக் காய்கறி பழங்களையும் சாப்பிடணும் தெரிஞ்சுதா?''

''சரி! பாட்டி! நான் விளையாடப் போயிட்டு வரேன்.''






உங்களை ஓராண்டுக்கு முன்புவரை 'சிரிக்கச் சிரிக்க'ப் பண்ணிய சித்திரக்காரர் 'சாமா' இன்று நம்மிடையே இல்லை. கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாக உங்கள் அப்பா அம்மாவை, அண்ணாவை, அக்காவைக் கல்கிப் பத்திரிகை மூலமாகச் சிரிக்கப் பண்ணியவர் அவர். கேலிச் சித்திரம் வரைவதில் சூரர் என்று பேராசிரியர் கல்கி அவர்கள் கையால் ஷொட்டு வாங்கியவர். கோகுலம் பிறப்பதற்கு முன் கல்கியில் சாமா வரைந்த சில சிரிப்புப் படங்களை இங்கே தருகிறோம். சித்திரங்கள் பழசானாலும் அவர் சிரிப்புகள் சிரஞ்சீவியல்லவா?




"அடாடா! அடையாளம் தெரியாமே இப்படி அடியோடு மாறிப்போய் விட்டாயே? முந்தி யெல்லாம் கட்டையாக் குட்டையாய் எப்படி இருந்தே? இப்போ இளைத்துத் துரும்பாய்ப் போய் விட்டாயே!"



"...முந்தி செக்கச்செவேலென்று ராஜா வாட்டமா இருந்தாயே, இப்போ இப்படி ரொம்பக் கறுத்துப் போய் விட்டாயே, வெராமா!"





மனைவி: வீட்டிலே இவ்வளவு இடம் இருக்கிறபோது, எதற்காக இப்படி யெல்லாம் அவஸ்தைப்பட்டுக்கொண்டு தூங்குகிறீர்களாம்?
கணவன்: அடி அசடே! இதுகூட ஒரு கேள்வியா? நாளிக்கு நான் ஜயிலில் போகிறேனல்லவா! அதற்குத்தான் பழகிக் கொள்கிறேன்!



கணவன்: நான் எழுதிய கட்டுரையைக் குழந்தை கிழித்துவிட்டான்!
மனைவி: அடக், கண்ணு! உனக்கு எப்படிடா படிக்கத் தெரிந்தது?



மனைவி: யாரையோ கூட அழைத்துக் கொண்டு வருகிறீர்களே அவர் யார்?
கணவன்: யாரென்று எனக்குத்தெரியாது! பஸ்ஸிலிருந்து என் பின்னாலேயே பேப்பரைப் பார்த்துக்கொண்டு வருகிறார்.
மனைவி: அதுசரி, பேப்பர் யாருடையது?
கணவன்: பேப்பர் அவருடையதுதான்.




"இல்லைபாட்டி! நான் வேதராமன் இல்லே. என் பேர் சாம்பமூர்த்தியல்லவா?"

"ஆச்சரியமான்னா இருக்கு! உடம்பு தான் மாறிப் போறதென்றால் பெயரைக்கூடவா இப்படி மாற்றிக் கொள்ளணும்?"



ஜூலியஸ் ஸீஸர்




கி.மு. 44ல் ரோமானிய சாம்ராஜ்யத்தின் அதிபதியாகவும் சர்வாதிகாரியாகவும் விளங்கினார் **ஜூலியஸ் ஸீஸர்**. இந்த உன்னதமான பதவியை அடைய அவர் போர்க்களத்தில் பத்தாண்டு களைக் கழிக்க வேண்டியிருந்தது. காலஸ் (Gauls) இனத்தவருடன் போராடியபடி. யுத்த களத்திலிருந்து இத்தாலிக்குத் திரும்பியபோதும் தலைமைப் பதவிக்கு எதிர்ப்புத் தெரிவித்துச் சவால் விட்டு நின்றான் பாம்பே என்பவன். பாம்பேயைத் தோற்கடித்த பிறகும் ஸீஸருக்குப் பத்திரமான நிலை ஏற்பட்டு விடவில்லை. வெற்றிவீரராக,



ரோமாபுரிக்குள் நுழைந்த போதும் ஜெயகோஷமிட்டு ஆரவாரமிடும் கூட்டத்தினிடையே விரோதிகள் பலர் பதுங்கித்தானிருந்தார்கள்.

லூப்ரிகால் என்ற திருவிழா நாள். விருந்தும் கேளிக்கையும். விளையாட்டு வீரர்கள் பான் (Pan) என்ற கடவுளைக் கௌரவிப்பதற்காக விளையாட்டுப்பந்தயங்களில் ஈடுபட்டிருந்தார்கள் உற்சாகமாக. ரோம சாம்ராஜ்யமே மகிழ்ச்சியிலும் குதூகலத்திலும் மூழ்கிக் கிடந்தது. விடுமுறை நாள் மனோபாவத்துடன். நகரின் வீதிகளெங்கும் மக்கள் வெள்ளம். போர்க்களத்தில் மாபெரும் வெற்றி கண்டு திரும்பியுள்ள அந்த மாவீரனின் முகதரிசனத்துக்காகக் குழுமிக் கிடந்தார்கள். வெற்றி மகுட மணிந்து ஸீஸர் பவனி வந்து கொண்



டிருந்தார், வணக்கத்துக்குரிய மரியாதையையும் வரவேற்பையும் மக்களிடமிருந்து ஏற்றுக் கொண்டவாறே.

திடீரென்று மக்களின் மகிழ்ச்சி ஆரவாரக்குரல்களைக் கிழித்துக் கொண்டு ஒரு குரல் கிறீச்சிட்டது— ''ஸீஸர்! மார்ச் பதினைந்தாம்தேதி ஜாக்கிரதை!'' அதன் பொருள் புரியவில்லை ஸீஸருக்கு. ஆனால் ஆணையிடுவது போன்ற அந்தக் குரலின் விநோதத் தன்மையை உணர்ந்து தம் ரதத்தை நிறுத்துமாறு கட்டளையிட்டார் ஸீஸர்.

இப்படி அச்சுறுத்தும் ஆணை பிறப்பித்தது யார் என்று வினவினார். ஸீஸரின் நண்பனான **புரூடஸ்** ''குறி சொல்லும் பழக்கமுடைய ஒருவன், மார்ச் மாதம் பதினைந்தாம் தேதியன்று தாங்கள் உஷாராக இருக்க வேண்டுமென்று எச்சரிக்கிறான்'' என்றான்.

''அவனை என் முன் அழைத்து வாருங்கள். அவன் முகத்தை நான் காண வேண்டும்'' என்றார் ஸீஸர். கூட்டத்திலிருந்து ஒரு வயோதிகனை இழுத்து வந்து மன்னர் முன் நிறுத்தினார்கள். அந்தக் கிழவன் மறுபடியும் அதே எச்சரிக்கையை ஸீஸரின் முகத்துக்கு நேரே விடுத்தான். 'பிவேர் தி இட்ஸ் ஆஃப்



மார்ச்–' என்பதே அந்தக் குறி சொல்வோன் எழுப்பிய குரல். இட்ஸ் என்பது மார்ச், மே, ஜூலை, அக்டோபர் ஆகிய மாதங்களின் பதினைந்தாம் தேதியையும் மற்ற மாதங்களின் 13ம் *தேதியையும் குறிக்கும் ஒரு சொல். இதற்குப் போய் மாவீரன் ஸீஸர் பயப்படுவானேன்?

ஊர்வலம் மேலே நகர்ந்தது. ஆனால் ஸீஸரின் நண்பன் புருடஸ் மட்டும் பின்தங்கி விட்டான். குறி சொல்வோனின் அந்த எச்சரிக்கை அவனைச் சிந்தனைக்குள்ளாக்கியது. மகத்தானதொரு பதவியை ஸீஸர் ஏற்றுள்ளது



குறித்து மந்திராலோசனை சபை (ஸெனெட்) அங்கத்தினர்களில் . பலர் கவலையடைந்துள்ளதைப் போலவே, புருடஸூம் கலக்கமடைந்திருந்தான்— ஸீஸர் கொடுங்கோலனாக மாறி விடுவாரோ என்று.

யோசனையிலாழ்ந்துள்ள புருடஸை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தது மற்றோர் உருவம். அவன் பெயர் **காஷியஸ்.** திறமைசாலியும், தந்திரக்காரனுமான இவன் இறந்த பாம்பேயை நேசிப்பவன். ஸீஸர் பாம்பேயைக் கொன்றதிலிருந்து அவருடைய பரம விரோதியானவன். ஸீஸரின் விரோதிகளில் காஷியஸூம் ஒருவன். ஸீஸரை மனமார வெறுப்பவன்.

இந்த வெறுப்பும் விரோதமும் 'ஸீஸரை எப்படியும் அழித்தே தீருவேன்' என்ற வைராக்கியத்தை வளர்த்திருந்தது அவனுள். யோசனையிலாழ்ந்தபடி தனித்திருக்கும் ஸீஸரின் தோழனான புருடஸ், காஷியஸின் பார்வையில் பட்ட




தும், திட்டமிடும் அவன் மனம் குதூகலமடைந்தது. ஸீஸரைக் கொல்லும் தனது சதித் திட்டத்தில் புருடஸையும் சேர்த்துக் கொள்வதென்ற முடிவுடன் அவனை அணுகினான் காஷியஸ்.

காஷியஸின் கபடமான பேச்சைக் கேட்ட புருடஸ் முகம் சுளித்தான். காஷியஸின் வார்த்தைகள் புருடஸின் உள்ளத்தில் சற்றே சலனத்தை ஏற்படுத்தினாலும் தன் உயிர்த் தோழனான ஜூலியஸ் ஸீஸருக்குக் கெடுதல் நினைக்க விரும்பவில்லை. உயர்ந்த நோக்கங்களைக் கொண்ட உன்னதமான மனிதன் புருடஸ். 'இம்மாதிரியான விஷயங்களைத் தற்போது தான் கேட்க விரும்பவில்லை என்றும், தனக்குச் சிந்திக்க அவகாசம் தேவை' என்றும் காஷியஸிடம் கூறினான் புருடஸ்.



ஊர்வலம் முடிந்து. நண்பன் **மார்க் ஆந்தனியுடன்** திரும்பிக் கொண்டிருந்தார் ஸீஸர். புருடஸும் காஷியஸும் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டார்.



அவரது முகம் கறுத்தது. தன் நண்பன் ஆந்தனியிடம் ''அந்தக் காஷியஸை நம் பக்கூடாது. ஆபத்தானவன்'' என்றார்.

ரதத்தில் திரும்பிப் போய்க் கொண்டிருந்த ஸீஸரின் முகத்தில் கோபத்தைக் கண்டான் புருடஸ். **காஸ்கா** என்ற ஸெனடரிடம் அதுபற்றிக் காரணம் கேட்டான். மார்க் ஆந்தனி ஸீஸரை மன்னனாக முடிசூடிக் கொள்ள வேண்டியதாகவும், ஸீஸருக்கு அந்த யோசனை உகந்ததானாலும், மக்கள் தன்னைப் பெரிய பேராசைக்காரனென்று நினைப்பார்கள் என்பதற்காக மறுத்ததாகவும் காஸ்கா கூறினான்.

இந்தச் செய்தி புருடஸைக் குழப்பியது. 'பதவி தாகம் கொண்டவராயிற்றே ஸீஸர். ரோம சாம்ராஜ்யத்தின் மன்னனாகவே முடி சூடிக்கொண்டு, முந்தைய ஆட்சியாளர்களைப் போலக் கொடுங்கோலராக மாறி விடுவாரோ?' புருடஸின் உள்ளத்தைப் புரிந்து கொண்ட காஷியஸ் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் தன் போதனையைப் பக்குவமாக அவனுள் செலுத்தினான்.

அன்றிரவு காஷியஸ் தனது திட்டத்தில் இன்னும் ஒரு படி முன்னேறிச் செயல்பட்டான். தன் அந்தரங்கஅறையில் பல கடிதங்களைப் பலருடைய கையெழுத்துக்களில் தயாரித்தான். ரோமானியப் பெருங்குடி மக்கள் பலர் எழுதியதாக இருந்தன அந்தக் கடிதங்கள். எல்லாக் கடிதங்களுமே புரு



டஸைப் புகழ்ந்தும் ஸீஸரை இகழ்ந்தும் எழுதப்பட்டிருந்தன. இப்படி உருவாக்கிய போலிக் கடிதங்களை நள்ளிரவில் புருடஸின் வீட்டு ஜன்னல் வழியாக உள்ளே வீசினான் காஷியஸ். இந்தக் கடிதங்கள் நல்ல பலனளிக்கும் என்ற திருப்தியோடு தன் வீடு திரும்பினான்.

காஷியஸின் திட்டம் எதிர்பார்த்தபடியே வேலை செய்தது. காஷியஸின் போலிக் கடிதங்களைப் படித்தான் புருடஸ். ரோம சாம்ராஜ்யத்தின் பெரும் புள்ளிகளில் பலர், ஸீஸர் சர்வாதிகாரியாக மாறுவதைத் தடுக்கத் தன் உதவியை நாடுகிறார்கள் என்ற முடிவுக்குக் கொண்டு வந்தன அக்கடிதங்கள். ரோம சாம்ராஜ்யத்தின் நன்மையைக் கருதி ஸீஸரைப் பதவியிலிருந்து அகற்ற வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான் புருடஸ். ஸீஸரை அதிகாரத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கான ஒரே வழி அவரைக் கொல்வதுதான்! உற்ற நண்பனைக் கொல்லத் தீர்மானித்து விட்டான் உயிர்த்தோழன் புருடஸ்.

(தொடரும்)






கரம் மிக்ஸர்

மூக்குக் கண்ணாடி




☐ மூக்கின் மேல் அணியும் கண்ணாடியை முதன்முதலில் கண்டு பிடித்தது சீனர்கள்தான். ரோமானிய சக்கரவர்த்தி சில வேளைகளில் கண்ணாடி அணிவதுண்டு என்று வரலாறு கூறுகிறது. பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் மூக்குக் கண்ணாடி பரவலாக விற்பனைக்குத் தயாராயிற்று. ஐரோப்பாவில் பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே மூக்குக் கண்ணாடிகள் பிரபலமாகி விட்டன. இதற்குக் காரணமாக இருந்தவர்கள் பிளாரன்ஸைச்சேர்ந்த மத குருவான அலெக்சாண்டர் டிஸ்பினா என்பவரும் அதே ஊரைச் சேர்ந்த சால்வினோ ஆர்மதி என்பவரும்தான்.

'பஸ்' - வாகனம்




☐ நீங்கள் இப்போது பிரயாணம் செய்யும் பேருந்து வாகனத்தை 'பஸ்' என்கிறீர்களே, அந்தப் பெயர் எப்படி வந்தது தெரியுமா? ஒரு லத்தீன் வார்த்தையின் கடைசிப் பகுதிதான் இந்த 'பஸ்'. ஆம்னி பஸ் என்பது அந்த வார்த்தை. அதன் பொருள் எல்லாவற்றுக்கும் (For all). 'பஸ்' என்றால் எல்லாருக்குமான ஒரு வாகனம். உலகின் முதல் பஸ் ஓடியது எப்போது தெரியுமா? 1662ல் பாரிஸ் நகரில். குதிரைகளால் இழுக்கப்படும் பெரிய கோச்சுக்களைப் பொதுமக்களின் வசதிக்காக இயக்குவதற்குப் பாஸ்சால் (Paschal) என்பவருக்குப் பதினாலாம்லூயி மன்னர் அனுமதி வழங்கினார். ஒவ்வொரு கோச்சிலும் ஆறு பிரயாணிகள் அமர்ந்துசெல்லலாம். எத்தனை தூரமானாலும் ஒரே கட்டணம்தான். இங்கிலாந்தில் முதல் பஸ் சர்வீஸ் ஆரம்பமானது 1834ல் இருபத்திரண்டு பேர் அமரக்கூடிய கோச்சுகள். ஆரம்பத்தில் பஸ்களைக் குதிரைகள்தான் இழுத்துச் சென்றன. பிறகுதான் மோட்டார் கார் தோன்றியது.

கால்குலேட்டர்




☐ இன்று மின்சாரத்தினால் இயங்கும் கணக்கிடும் கருவிகள் இருப்பது உங்களுக்குத் தெரியும். நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் ஒரு கணக்கிடும் கருவியைக் கண்டுபிடித்திருந்தான். அதற்கு அபாகஸ் (Abacus) என்று பெயர். (Abax) என்ற கிரேக்க மொழியிலிருந்து வந்தது அபாகஸ். ஒரு மரச் சட்டம், அதில் பல வரிசைக் கம்பிகள். ஒவ்வொரு கம்பியிலும், மணிகள் கோக்கப்பட்டிருக்கும் முதல் கம்பியில் ஒன்பது மணிகள். ஒன்றிலிருந்து ஒன்பது வரை எண்ணுவதற்கு. இரண்டாவது கம்பியிலுள்ள மணிகள் பத்துக்களையும், மூன்றாம் கம்பியிலுள்ள மணிகள் நூறுகளையும், அடுத்தது ஆயிரங்களையும் இப்படியே அடுத்தடுத்துக் கணக்கிட. 348—என்பதை எப்படி இதில் கணக்கிடுவது. முதல் கம்பியில் எட்டு மணிகளையும், இரண்டாவதில் நான்கு, மூன்றாவதில் மூன்று. இந்த அபாகஸ் இன்றும்கூடக் கீழ்த்திசை நாடுகளில் புழக்கத்திலுள்ளன.

நீராவி



☐ அடுப்பிலுள்ள கெட்டிலில் நீர் கொதிக்கும்போது அதன் மூக்கிலிருந்து வெள்ளையாகப் புகை வருகிறதே அது என்ன? நீராவி என்பீர்கள், இல்லையா? சரி, அந்த நீராவியை உங்களால் காண முடியுமா? முடியாது. ஏன்? நீர் கொதிக்க ஆரம்பிக்கும்போது அது ஒளி ஊடுருவக்கூடிய நிறமற்ற ஒரு வாயுவாக மாறுகிறது. உருவமற்ற இந்த நீராவி கெட்டிலின் மூக்கு வழியே வெளியேறும்போது வெளியிலுள்ள குளிர்ந்த காற்றைச் சந்திக்கிறது. இதனால் இந்த வாயு உடனே மறுபடியும் நீராக உறைகிறது. கெட்டிலின் மூக்கில் நீ காணும் வெண்மையான ஆவி நீராவியல்ல. தண்ணீரின் மிக நுண்ணிய துளிகளைத்தான் காண்கிறாய். உண்மையான நீராவியைக் கண்ணால் காண முடியாது. நீராவி உறையுமுன் கெட்டில் மூக்கு நுனிக்கும் நீ காணும் வெள்ளைப்புகைக்கும் நடுவில் உள்ள மிக நுண்ணிய இடைவெளியில் இந்த உருவமற்ற நீராவி இருக்கிறது.

பிளிம்ஸோல் லைன்



☐ நீங்கள் கப்பலைப் பார்த்திருக்கிறீர்களா? உங்களில் ரொம்பப் பேர் கடலையே பார்த்திருக்க மாட்டீர்களே. கப்பலை எப்படிப் பார்த்திருக்கப்போகிறீர்கள்? போகட்டும். கப்பல்களின் பக்கவாட்டில் ஓர் இடத்தில் ஒருவட்டமும் அதன் குறுக்கே ஒரு படுக்கைக் கோடும் வரையப்பட்டிருக்கும். இதற்கு பிளிம்ஸோல் லைன் (Plimsoll Line) என்று பெயர். எதற்காக இந்தக் குறி? அந்தக் கப்பல் கடலில் பத்திரமாகப் பிரயாணம் செய்ய அதில் எவ்வளவு பளுவை ஏற்றலாம் என்பதைத் தெரிவிக்கிறது இந்தக் குறி. அளவுக்கதிகமான சாமான்களை ஏற்றிச் சென்றதினால் நடுக்கடலில் பல கப்பல்கள் மூழ்கி மாலுமிகள் உயிரிழந்தனர். சாமுவேல் பிளிம்ஸோல் என்ற பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினர், கப்பல்களின் பாதுகாப்புக்கு அது எவ்வளவு பளுவைத் தாங்கும் என்பதைக் கணக்கிட்டு இப்படியொரு குறியிட வேண்டும் என்று ஒரு சட்டத்தையே கொண்டு வந்து நிறைவேற்றினார். அந்தக் குறி வரை கப்பலின் அடித்தளம் கடல் நீரினுள் மூழ்கும்படி பண்டங்களை அதில் ஏற்றிச் செல்லலாம்.

இடைவெளி எவ்வளவு

☐ சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலேயுள்ள தூரம் உத்தேசமாக 93மிலியன் மைல்கள். உத்தேசமாக என்றுதான் குறிப்பிட்டிருக்கிறோம். ஏனென்றால் பூமி சூரியனைச் சுற்றிவரும் பாதை வட்டவடிவமானதல்ல. முட்டைவடிவமானது. ஜனவரியில் 91½ மிலியன் மைல் இருந்தால் ஜூன் மாதத்தில் 94½ மிலியன் மைல்களாக இருக்கும்.

பழைய பார்லிமெண்ட்

☐ உலகிலேயே மிகப் பழைமையான பார்லிமெண்ட் எது தெரியுமா? பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பார்லிமெண்டையே எல்லோரும் பழைமையானது என்பார்கள். பார்லிமெண்ட் அமைப்பின் தாய் (The mother of Parliament) என்று கூட பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு ஒரு பாராட்டுப் பெயர் உண்டு. ஆனால் இன்று இயங்கி வரும் பார்லிமெண்ட் அமைப்புக்களில் பழைமையானது ஐஸ்லாந்தின் பார்லிமெண்ட்தான். இதை ஆல்திங்(Allthing) என்று அழைக்கிறார்கள். இதற்கு அசெம்பிளி முழுவதும் (Whole Assembly) என்று பொருள். ஐஸ்லாந்தின் முதல் பார்லிமெண்ட் கூடியது கி.பி. 930ல். 1944லிருந்து இந்நாடு குடியரசாக மாறியது. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை இது தன் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கிறது. நாட்டின் நிர்வாகத்தைப் பிரதமரும் ஆறு பேர்கொண்ட காபினெட்டுமே நடத்துகிறது. பார்லிமெண்டின் விருப்பப்படி, ஐஸ்லாந்தின் தலைநகரான ரேய்க்ஜவிக்கில் ஆல்திங் கூடுகிறது. மேல்சபை, கீழ்சபை என்று இரு சபைகளுண்டு. இரண்டுமே சமபலம் கொண்டவை.

அரியணைப் படிகள்



கே.கே.கோமளா

17. அன்பு சாம்ராஜ்யம்

குன்றின் உச்சியில் இருந்த அனைவரும், வெடிக்கப் போகும் பீரங்கியின் ஓசைக்காகக் காத்திருந்தனர். பீரங்கியும் வெடித்தது. ஆனால் கோட்டையை நோக்கியல்ல. எதிரியின் கோட்டைக்குக் குறி வைத்த குண்டுகள் வானத்தை நோக்கி வெடித்துச் சிதறின. பீரங்கியின் அடியில் தன் நினைவின்றி விழுந்து கிடந்த மனிதனின் மீது அவர்கள் கவனம் சென்றது.

''ஆகா! ருஸ்தும்!'' பல குரல்கள் எழுந்தன. பாதுஷா ஹுமாயூன் ஓடி வந்து அவனருகில் அமர்ந்தார். அவன் உதடுகளின் முணுமுணுப்பைக் காது கொடுத்துக் கேட்டார். ''சுடாதீர்கள்! சுடாதீர்கள்!'' அந்தநினைவிழந்த நிலையிலும் அவன் உதடுகள் துடித்துக் கொண்டேயிருந்தன. அவனது மயக்கம் தெளிவிக்கப்பட்டுக் காயங்களுக்கு மருந்திடப்பட்டது. சிறிது பால் அருந்திய பின் அவன் பேசும் சக்தியைப் பெற்றான். அவனிடமிருந்து விஷயம் அறிந்ததும் ஹுமாயூன் சிறிது நேரம் பேசும் சக்தியையே இழந்து நின்றார். இந்நேரம் இந்த ருஸ்தும் வந்து பீரங்கித் திசையைத் திருப்பி விடவில்லையானால்... தம் அருமைக் குழந்தையின் மீது தாமே குண்டெறிந்து... ஐயோ! என்ன பயங்கரம்! அவர் உடல் சிலிர்த்தது. கம்ரான் மீது கொண்ட கோபம் பெரும் சீற்றமாக மாறியது. வெறி கொண்ட வேங்கையெனச் சீறினார் ஹுமாயூன்.

''கோட்டைக் கதவுகளைத் தகர்த்தெறியுங்கள். கோட்டையை இடித்துத் தரைமட்டமாக்குங்கள். இன்று மாலை கோட்டை நம் வசமாகி விட வேண்டும். கம்ரானைச் சிறைப்பிடித்து இழுத்து வாருங்கள். இளவரசரின் உயிருக்கு எந்த ஆபத்தும் நேரிடாமல் எல்லாச் செயல்களும் நடைபெற வேண்டும்...ம்...'' ஆணையிட்டார் தம் வீரர்களுக்கு. இளவரசரைக் காக்க எதையும் செய்யச் சித்தமாக உள்ள சிங்க வீரர்கள் படை கோட்டையை நோக்கிப் பறந்தது.

அங்கோ? கம்ரான் நினைத்தபடி ஒன்று கூட நடக்கவில்லை. கம்ரான் பக்கம் சேர்வது போல் நடித்த ஹுமாயூனின் நண்பர்கள், வீரர்கள், பிரபுக்கள் அனைவரும் இப்போது ஹுமாயூன் வருகைக்கு வேண்டிய உதவிகளைச் செய்யத் தொடங்கி விட்டனர். கோட்டை வாயில்களைத் திறந்து விட்டனர். கம்ரானின் ஆட்களைப் பிடித்துச் சிறைக்கு இழுத்துச் சென்றனர். எதிர்த்தவர்களைக் கொன்று குவித்தனர். நகரில் ஆங்காங்கு கிளர்ந்தெழுந்து கலகம் செய்ய ஆரம்பித்தனர்.

கம்ரானுக்கு நிலைமை புரிய ஆரம்பித்து விட்டது. இனித் தாமதிக்கும்ஒவ்வொரு விநாடியும் தன் தலைக்கு ஆபத்து என்பதை உணர்ந்ததுதான் தாமதம். அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

அனுகா மெதுவாகக் கண்களைத் திறந்தாள். 'ஆ! நான் இன்னும் உயிரோடு தான் இருக்கிறேனா? சாகவில்லையா?குழந்தை அக்பர் என்னவானான்?' மெதுவாகக் கண்களைச் சுழல விட்டாள்.

அவள் கண் விழித்ததைக் கண்டதும் ஜீஜீ மெதுவாகக் கட்டிலின் அருகே வந்தாள். ''அனுகா! எப்படி இருக்கிறது இப்போது? அதிகம் அலட்டிக் கொள்ளாதே. சாய்வாக உட்கார்ந்து

அரியணைப்படிகள் பரிசுத் திட்டம்

பேரரசர் அக்பர் சக்கரவர்த்தியின் இளமைப் பருவத்து நிகழ்ச்சிகளை அரியணைப்படிகள் என்ற தலைப்பில் தொடராகப் படித்து மகிழ்ந்த உங்களுக்கு அது முடியும் இந்த இதழில் இன்னொரு மகிழ்ச்சியான செய்தி. இந்தத் தொடரை எழுதிய ஸ்ரீமதி கே. கே. கோமளா அவர்கள் உங்களுக்கெல்லாம் பரிசு வழங்க விரும்புகிறார். அவர் எழுதிய கடிதம் இதோ!

நான் எழுதிய 'அரியணைப்படிகள்' குழந்தைகளுக்காக நான் எழுதிய முதல் நாவல் என்பதாலும், 'கோகுல'த்தில் முதன் முதலில் வந்திருப்பதாலும் என் மகிழ்ச்சியைக் 'கோகுலம்' படிக்கும் குழந்தைகளுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தொடர்கதைக்குத் தாங்கள் தர நினைத்திருக்கும் சன்மானத் தொகையைக் குழந்தைகளுக்கு ஏற்றாற்போல ஏதேனும் போட்டி வைத்து உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள், மிக்க நன்றி.

இப்படிக்கு
கே. கே. கோமளா

அரியணைப்படிகளைப் படித்த உங்களுக்கு ஓர் அதிர்ஷ்டப் பரிசும் இருக்கிறது. என்ன போட்டி எவ்வளவு பரிசு என்பதை விரைவில் அறிவிக்கிறோம். - ஆசிரியர்

கொள்'' என்ற ஜீஜீ தலையணைகளை அடுக்கி வசதி செய்தாள்.

''ஜீஜீ! குண்டு என்மீது விழவில்லையா? குண்டு வெடித்த சத்தம் கூடக் காதில் விழுந்ததே.''

''குண்டு என்னவோ வெடித்தது. ஆனால் தக்க சமயத்தில் ருஸ்தும் போய்த் திசை மாற்றியிராவிட்டால் இந்நேரம் நீ இப்படி உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கமாட்டாய்.''

''ஜீஜீ! இப்போது அக்பர் எங்கே, எப்படி இருக்கிறான்? நான் பார்க்க வேண்டுமே!''

''அக்பரின் உடல்நிலை இரண்டொரு தினங்களில் சரியாகி விட்டது. ஆனால் நீதான் அதிர்ச்சியில் இத்தனை நாட்கள் நினைவிழந்து கிடந்தாய்.''

''இத்தனை நாட்கள் என்றால்?''

''கடந்த ஒரு வாரமாக.''

''ஒரு வாரமாகவா? அப்போ.... போரின் முடிவு?''

''அனுகா, போரில் நம் பாதுஷாவுக்குத்தான் வெற்றி! அந்தப் பாவி கம்ரான் மீண்டும் தப்பி ஓடிவிட்டான்.''

''அப்படியா? ஜீஜீ! நான் அக்பரைப் பார்க்க வேண்டுமே! வருகிறாயா போகலாம்?'' கட்டிலை விட்டுக் கீழே இறங்க முயற்சித் செய்தாள் அனுகா.

''அனுகா! அதிகம் அலட்டிக் கொள்ளாதே! இதோ நாங்களே வந்து விட்டோம்...'' குரல் கேட்டுத் திரும்பினாள் அனுகா. ஹமீதா பானு பேகம் பாதுஷா ஹுமாயூனுடன் நுழைந்து கொண்டிருந்தாள்.

''அனுகா! உன் உடல் நிலை தேவலையா? பேகம் அளவுக்குத் தெம்பு வந்து விட்டதா?'' கருணையோடு வினவினார் பாதுஷா.

அனுகாவின் அருகில் வந்த ஹமீதா பானு கண்களில் பொங்கும் நீருடன் அனுகாவின் கைகளை எடுத்துத் தன் கன்னங்களில் வைத்துக் கொண்டாள்.

''அனுகா! இளவரசருக்காக உன் உயிரையும் கொடுக்கச் சித்தமாக இருந்தாயே, அதை எப்படிப் போற்றிப்புகழ்வது என்றே தெரியவில்லை. அனுகா! உன் தியாகச் செயலுக்கு ஈடாக எதையுமே கொடுக்க இயலாது. ஆனாலும் நீ விரும்பியதைக் கேள் அனுகா! தரச் சித்தமாக இருக்கிறார் பாதுஷா!'' என்றாள் ஹமீதா அன்போடும் பரிவோடும்.

''நான் என்ன செய்து விட்டேன் அம்மா அப்படி? எனக்கு எதுவும் வேண்டாம். தங்கள் அன்பு கடைசி வரை மாறாமல் இருந்தால் அதுவே போதும்.''

''அனுகா! நீ விரும்பியதை அளித்தால்தான் எனக்குத் திருப்தியாயிருக்கும். நீ விரும்பியதைப் பயமின்றிக் கேள், அனுகா!'' என்றார் பாதுஷா.

''பாதுஷா ஸலாமத்! நான் கேட்க என்ன இருக்கிறது? ஒரே ஒரு வரம் மட்டும் தாருங்கள் போதும்...''

''என்ன அது அனுகா?'' அரசரும் அரசியும் ஒரே சமயத்தில் கேட்டனர்.

''எந்தக் காரணத்தைக் கொண்டும் என் உயிரிடமிருந்து என்னைப் பிரித்து விடாதீர்கள்.''

''உயிரிடமிருந்தா? புரியும்படி பேசு அனுகா....''

''அரசே! தாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து விட்டீர்கள். இனி இந்த ஏழையின் சேவை போதும் என்று என்னை

என் அக்பரிடமிருந்து பிரித்து விடாதீர்கள், பாதுஷா!'' என்று வேண்டிய படியே ஹுமாயூன் முன் மண்டியிட்டாள் அனுகா.

அவளை அன்புடன் தொட்டுத் தூக்கிய ஹமீதா பானு அவளைக் கட்டிலருகே கூட்டிச்சென்று, அதன் மீது உட்கார வைத்தாள். தானும் அருகில் அமர்ந்து கொண்டாள்.

''ஹா!...ஹா!...ஹா!'' என்று பெரிதாக நகைத்தவாறு பாதுஷா ''ஐயோ அனுகாவே! நீ ஏதோ பெரியதாகக் கேட்கப் போகிறாய் என்றல்லவா எதிர் பார்த்தேன். சரியான அன்புப் பைத்தியம் நீ. கவலைப்படாதே அனுகா. நீ விரும்பியபடியே நடக்கும். நீ உயிருள்ளளவும் இந்த அரண்மனையிலேயே இருக்கலாம். அக்பரின் உயிரைக் காப்



பாற்றப் பாடுபட்ட உங்கள் அண்ணவரின் குடும்பங்களுக்கும் இனி நான்தான் பொறுப்பு. உன் மகன் ஆதம் கான் இளவரசரைப் போலவே நடத்தப்படு வான். அவனுக்கு உரிய வயது வந்ததும் அவனைப் பெரிய பொறுப் பான பதவியில் அமர்த்துவது என் கடமை. போதுமா?'' என்றார்.

''போதும் பாதுஷா! போதும். உங்கள் கருணை வெள்ளத்தில் இந்த ஏழையை முழுக அடிக்காதீர்கள்...'' நன்றிக் கண்ணீர் அவள் கண்களை நிறைத்தது.

''அனுகா! இன்னும் நீ முற்றிலும் குணமடையவில்லை. மிகவும் பலவீன மாக இருக்கிறாய். நீ உன் உடம்பைத் தேற்றிக் கொள்ள வேண்டும். உன் னுடைய அக்பருக்காகத்தான் கூறு கிறேன். அப்பப்பா! இந்த மூன்று தினங்களாக என்னை என்னபாடு படுத்தி விட்டான் தெரியுமா?''

''ராணி சாகிபா! எங்கே என் கண் மணி? அவனை நான் கண் குளிரப் பார்த்து எத்தனை தினங்களாகி விட் டன! எங்கே அம்மா இளவரசர்?''

''அப்பப்பா! நீயும் ஆரம்பித்துவிட் டாயா? இப்படித்தான் அவனும் 'அனு காவுக்கு என்ன? ஏன் இப்படி எப்போ தும் தூங்குகிறாள்? ஏன் என்னோடு பேச வில்லை? எப்போது பேசுவாள்?' என் றெல்லாம் துளைத்து எடுத்துவிட்டான். அவனுக்குச் சமாதானம் கூறுவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. இப்போதுகூட மாலைத் தொழுகையில் உனக்காகப் பிரார்த்தித்துக் கொண் டிருக்கிறான், அத்தையுடன். இதோ வந்து விடுவான்....'' ஹமீதா பானு சொல்லி முடிப்பதற்குள் ''அனுகா! அனுகா!'' என்று கூவியபடியே உள்ளே ஓடி வந்த அக்பர் கட்டிலின்மீது தாவி ஏறினான்.

''அனுகா! உனக்குச் சரியாகி விட் டதா? நீ பேச ஆரம்பித்து விட்டாயா? உன்னால் நடக்க முடியுமா? இன்னும் ஏன் படுக்கையிலேயே இருக்கிறாய்?'' என்றெல்லாம் கேட்டபடியே அவளைக் கட்டி அணைத்து முத்தமிட்டான் அக்பர். அப்படியே அவனை ஆரத் தழுவி அணைத்து முத்தங்கள் பல சொரிந்தாள் அனுகா. அவள் கண்களில் ஆனந்தக்கண் ணீர் பெருகி வழிந்தபடியே இருந்தது.

''அழாதே அனுகா! அழாதே!'' என்ற அக்பர் தன் பிஞ்சுக் கரங்களினால் அவள் கண்ணீரைத்துடைத்தான். தன் கண்ணீரைத் துடைத்த அன்புக் கரங் களில் மீண்டும் முத்தமிட்ட அனுகா அவனை இறுக அணைத்துக்கொண்டாள். அந்த அணைப்பில் அவள் தன்னைச்சுற்றி யிருந்தவர்களை மறந்தாள். தன் மகனை யும் மறந்தாள். தன்னையே மறந்தாள். ''கண்ணே! அக்பர்!'' என்று முணு முணுத்தபடி அவள் வேறு ஓர் உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்!

அந்தப் பாசத்தின் பிணைப்பில் அனை வருமே மனம் நெகிழ்ந்தனர். அந்த அன்புச் சாம்ராஜ்யத்தைக் கலைக்க விரும்பாமல் அனைவரும் அப்படியே சிலையென நின்றிருந்தனர்.

(நிறைந்தது)



தெரியுமா? தெரியுமே!

2823.	காபினெட் மந்திரிகளைப் பிரிட்டனில் தேர்ந்தெடுப்பது (1) மக்களால் (2) மன்னரால் (3) பார்லிமெண்டினால் (4) பிரதம மந்திரியால். இவற்றில் எது சரி?	பிரதம மந்திரியால்
2824.	மர்மம், அற்புதம் ஆகியவை நிறைந்த நாவல்களும், நாடகங்களும் ஆங்கில இலக்கியத்தில் உருவானது எப்போது தெரியுமா?	முதலாம் எலிஸபெத்தின் ஆட்சிக் காலத்தில்
2825.	ஷேக்ஸ்பியர் தமது நாடகங்களை நிகழ்த்திப் பிரபலமானது எந்த அரங்கில்? அதன் பெயரென்ன?	குளோப் தியேட்டரில்
2826.	ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன் என்ற பிரபல எழுத்தாளர், எழுத்தாளராகுமுன் என்ன தொழில் செய்து கொண்டிருந்தார்?	கலங்கரை நிலையத்தின் (லைட் ஹவுஸ்) பொறியாளராக
2827.	புதையல் தீவு என்ற தம் நாவலுக்கு ஸ்டீவன்ஸன் முதலில் வைத்த பெயர் என்ன தெரியுமா?	தி ஸீ குக் என்று.
2828.	ஸ்டீவன்ஸன் தம் கடைசி நாட்களை —எடின்பரோவில், லண்டனில், பாரிஸில், ஸமோவாவில் கழித்தார். இதில எது சரி?	சமோவாவில்.
2829.	எஸ்கிமோக்கள் தங்கள் விளக்குகளில் எந்த எண்ணெயை உபயோகிப்பார்கள்?	சீல் என்ற கடல் பிராணியின் கொழுப்பிலிருந்து தயாராகும் எண்ணெயை.
2830.	மெழுகுவர்த்தி எந்தப் பொருளினால் செய்யப்படுகிறது.?	பாரஃபின் மெழுகினால்
2831.	ரேடியோ அலைகளின் வேகம் என்ன என்று தெரியுமா?	ஒரு வினாடிக்கு 1,86,000 மைல்கள்.
2832.	ராடார் கருவியைக் கண்டுபிடித்தவர் யார்?	ஆர். வாட்ஸன் வாட் என்பவர்.
2833.	காட் என்ற மீனிலிருந்து தயாராகும் காட் லிவர் ஆயிலில் எந்த விட்டமின் நிறைந்துள்ளது?	விட்டமின் 'டி'
2834.	மீனின் எலும்பிலிருந்து ஒரு பொருள் தயாரிக்கப்படுகிறது. அது என்ன?	மர வேலைகளுக்குப் பயன்படும் ஒருவகைப் பசை தயாரிக்கப்படுகிறது.
2835.	ஜாவாவில் வாழும் மனிதக் குரங்குகளுக்கு என்ன பெயர்?	உராங் உட்டாங்
2836.	ஹவாய் தீவுக்குப் போனால் அங்கு எந்தப் பழத்தை நீ ஏராளமாகக் காண்பாய்?	அன்னாசிப் பழத்தை.
2837.	ஹவாய்த் தீவுக்குப்போனால் அவர்கள் நமக்கு 'லீ' அணிவிப்பார்கள். இந்த லீ (Lai) என்பது என்ன?	மலர்மாலை
2838.	கீழ்க்காணும் பொருள்களில் ஒன்று கச்சாப் பொருளல்ல. அது எது? இரும்புத் தாது, பருத்தி, அலுமினியம், நிலக்கரி.	அலுமினியம்

மெக்ஸிகோ

கிருஷ்ணவேணி



கிட்டுவையும் பட்டுவையும் மெக்ஸிகோ நகரத்துக்கு அழைத்துப் போகிறார்கள், பெர்னாண்டஸும் அவன் தங்கை மரியாவும். கழுதை சவாரி செய்தபடியே விளக்கிக் கொண்டு போகிறான் பெர்னாண்டஸ்.

''மிகப் பழைமையான நகரம் இது. இங்குள்ள மரங்கள் பலவற்றின் வயது நானூறுக்கும் அதிகம். கோட்டைகள், அரண்மனைகளும் கூட இதே வயதானவைதான். நகரின் மத்தியில் உள்ள 'ப்ளாஸா' எனப்படும் 'பப்ளிக் ஸ்கொயர்' புராதன இடிபாடுகளின்மீது எழுப்பப்பட்டதாகும். இதை அடுத்துள்ள கட்டடங்களும் கடைகளும் உங்கள் ஊர்களில் உள்ளதைப் போல நாகரிக மோஸ்தரில் கட்டப்பட்டிருக்கிறதில்லையா?''

''வியாபாரம் செய்யும் அங்காடிகள் எங்குள்ளன?''என்று கேட்டாள் பட்டு.

''இந்தப் ப்ளாஸாவை அடுத்துள்ள பக்கத்துச் சாலைகளில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு குடியானவர்களும் கைவினைஞர்களும் தங்கள் பொருள்களை எப்படி விற்பனை செய்தார்களோ அதே போன்று இன்றும் சந்தையில் விற்பனை செய்வதைக் காணலாம். கொஞ்சம் வேடிக்கை பார்க்கிறீர்களா? அதோ அந்தக் கூடையின் விலையைக் கேட்டுப் பாருங்கள். ஆனால்ஜாக்கிரதை. அவர்கள் கேட்கும் விலையைக் கொடுத்து விடாதீர்கள். மூன்று பங்கு விலை கூறுவார்கள்'' என்று எச்சரித்தான் பெர்னாண்டஸ்.

''உங்கள் உடை எப்படி?'' என்றாள் பட்டு.

''கிராமத்து மக்களின் உடை எங்கள் பாரம்பரியத்தை விளக்கும் பண்டைய பாணியிலேயே இருக்கும். பருத்தியினாலான சென்னை வண்ணப் ஸ்கர்ட், முழங்காலுக்குக் கீழே தொங்கும்படி அணிந்திருப்பர். தலையில் ரெபோஸா அணிந்திருப்பார்கள்.''

''ரெபோஸா என்றால்?''

''சுருக்கம் செய்யப்பட்ட ஒருவகை ஷால். எங்கள் அத்தை வீடு மெக்ஸிகோ நகரில் உள்ளது, வாருங்கள், போகலாம்'' என்று முன்னால் நடந்தான் பெர்னாண்டஸ். சிவப்பு நிற ஓடு வேய்ந்த வெள்ளை நிறக் கட்டிடம். வீதிப் பக்கத்தில் உயர்ந்த மதில் சுவர். வீட்டுக்குப் பின்னால் தோட்டம். அதை பேஷியோ என்கிறார்கள். பெர்னாண்டஸின் அத்தை எங்களைச் சிரித்த முகத்தோடு வரவேற்றாள். மெக்ஸிகோ மக்கள் நட்புக்கு ஏற்றவர்கள் என்று

படித்திருந்தது கிட்டுவுக்கு நினைவுக்கு வந்தது.

விருந்தினர்களான கிட்டுவுக்கும், பட்டுவுக்கும் தண்ணீரில் தயாரித்த நீவ் என்ற ஒரு வகை ஐஸைக் கொடுத்து உபசரித்தாள் பெர்னாண்டஸின் அத்தை. தள்ளு வண்டியில் ஒரு மனிதன் இந்த 'வாட்டர் ஐஸை'விற்றுக்கொண்டு போனான். அந்த வெயிலுக்கு அது ரொம்ப இதமாக, சுவையாக இருந்தது.

மெக்ஸிகோ குழந்தைகளின் முழுச் சாப்பாடு நண்பகலில் தான். அவர்கள் சூப் திரவமாக இல்லை. சேமியாவின் மீது முட்டையை உடைத்து விட்ட மாதிரி இருந்தது. இதை ஃபோர்க்கினால்தான் (முள் கரண்டி) சாப்பிட வேண்டும் என்றான் பெர்னாண்டஸ்.

''எங்கள் முக்கிய உணவு டார்டியாஸ்'' என்றாள் மரியா. பட்டு புரியாமல் விழித்தாள்.

சோள அடையைத்தான் இப்படிக் கூறுகிறார்கள் என்பது அதைச் சாப்பிட்ட பிறகுதான் தெரிந்தது.

''அடேயப்பா, என்ன காரம்?'' என்று நாக்கைத் தொங்க விட்டபடி 'உஸ்'ஸர்டினான் பட்டு. சிகப்பு மிளகுப் பூச்சு கொண்ட இந்த அடையை என்சிலாபிஸ் என்று அழைக்கிறார்கள்.

''எங்கள் சாப்பாடெல்லாமே கொஞ்சம் விசித்திரமாக இருக்கும். மோலே என்று ஒரு வகை உணவு. வான்கோழியைப் பக்குவம் செய்து அத்துடன் ஆப்பிள், சாக்லேட் மற்றும் இருபது பதார்த்தங்களையும் சேர்த்துப் பரிமாறுவார்கள். ஃபிரிஹோலே என்பது ஒரு வகை உணவு. இது வறுத்த பீன்ஸினாலானது. ஃபிரிஹோலே ஃபிரிடோஸ் என்பது முதல் நாள் மிஞ்சிய அந்தப் பீன்ஸ் பொரியலை மறு நாள் மறு பக்குவம் செய்து உண்ணுவது'' என்றான் பெர்னாண்டஸ்.

''நம் ஊரில் முதல் நாள் மிஞ்சிய குழம்பு, கூட்டுக்களை மறு நாள் கொதிக்க வைத்து எரிச்சேரி செய்து சாப்பிடுவதில்லையா? அதைப் போல'' என்றான் பட்டு கிட்டுவிடம்.

''இன்னொரு உணவு உண்டு. அதைக் கேட்டால் நீங்கள் முகம் சுளிப்பீர்களோ என்னவோ?'' என்றாள் மரியா. பிறகு அதை விளக்கினாள். ''இகுனா'' என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?''

''ஓ தெரியுமே! உடும்பு தானே?'' என்றான் பட்டு. ''ஆமாம். ராட்சசப் பல்லி போல் இருக்கும். இதை வறுத்





துப் பக்குவம் செய்து உண்ணுவோம்.'' என்றபோது பட்டு, கிட்டுவின் முகம் போன போக்கைக் கண்டு பெர்னாண்டஸும் மரியாவும் கலகலவென்று சிரித்தார்கள். இப்போது பெர்னாண்டஸின் அத்தை குழந்தைகள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தார்கள். பெண்களுக்கும் ஆண்களுக்கும் தனித்தனிப் பள்ளிகளாம். பள்ளிக்கூட நாட்கள் கூட மார்ச்சிலிருந்து நவம்பர் வரை தானாம். மாரிக்காலம் முழுதும் பள்ளிகளே கிடையாது. மெக்ஸிகோ குழந்தைகளின் தாய்மொழி ஸ்பானிஷானாலும் ஆங்கிலமும் கற்பிக்கப்படுகிறது.

''சினிமாவுக்குப் போகிறீர்களா? இங்கு பெரிய பெரிய தியேட்டரெல்லாம் உண்டா?'' என்று கேட்டான் கிட்டு.

''சினிமாவா?'' என்று விழிகள் விரிய வியப்படைந்தார்கள் இருவரும். ''எப்போதாவது போவதுண்டு. ஆனால் நாங்கள் தனியாகப் போக அனுமதிக்க மாட்டார்கள். சனி, ஞாயிறுகளில் குழந்தைகளுக்கான விசேஷப் படங்களைத் திரையிடுவார்கள். மற்ற நாட்களானால் எங்களுடன் பெற்றோரோ ஆசிரியரோ வருவார்கள். அமெரிக்கப் படங்கள் இங்கு ரொம்பப் பிரபலம். ஆனாலும் நாங்கள் மெக்ஸிகோ படங்களைப் பார்ப்பதையே விரும்புவோம். நாங்கள் எந்தப் படங்களைப் பார்க்கலாம் என்பதை 'சர்ச்'தான் தீர்மானிக்கும்.''

''உங்கள் உடைகள் பற்றி..'' என்று கேட்டாள் மரியாவைப் பட்டு.

''அமெரிக்கர்களைப் போல ஆடை அணிந்தாலும், விழாக் காலங்களில் அணிந்துகொள்ளும் எங்கள் பண்பாட்டு ஆடைகளைத் தைக்க எங்களுக்குக் கற்றுத்தருவார்கள். சின்னப் பெண்கள் அணியும் ஆடைக்கு 'சீனா பாப்லானா' என்று பெயர். பண்டைக் காலத்தில் (பதினெட்டாம் நூற்றாண்டில்) ஒரு சீனப் பெண் இங்கு வந்து அந்த ஆடையை எங்கள் பெண்களுக்கு வழங்கிப் போனதாக ஒரு கதை உண்டு'' என்றாள் மரியா.

''எங்கள் தேசிய வர்ணம் பச்சை. சிகப்பும் வெள்ளையும் கூடத் தாராளமாகப் பயன்படுத்துவோம்.''

''ஆழ்ந்த வர்ணங்களில் பளபளப்பான மணிமாலைகளைக் கழுத்தில் இரண்டு மூன்று சுற்றுச் சுற்றியபடி (நெக்லஸ்) அணிந்து கொள்ளுவது எங்களுக்குப்பிடிக்கும்'' என்றாள் மரியா.

பட்டுவின் தலைப் பின்னலையும் ரிப்பனையும் பார்த்து விட்டு ''இதே மாதிரிதான் நாங்களும் ரிப்பன் வைத்துக் கொள்ளுவோம்'' என்றாள் மரியா பெருமையாக. அப்போது மரியாவின் அத்தை மகன் இரண்டு பெரிய மாட்டுக் கொம்புகளை மார்புக்கு நேராகப் பிடித்தபடி காளை பாய்வதைப் போலப் பாவலாக் காட்டினான் பெர்னாண்டஸிடம். பெர்னாண்டஸ் ஒரு சிகப்புக் குல்லாயை அப்பையன் முன்னால் ஆட்டிவிட்டு ஒதுங்கிக் கொண்டான். கிட்டுவுக்கு அவர்கள் ஏதோ விளையாடுகிறார்கள் என்பது புரிந்தது. பெர்னாண்டஸ் விளக்கினான். ''எங்களுடைய விருப்பமான விளையாட்டு மாட்டுச் சண்டை—புல் ஃபைட். ஒரு பெரிய அரங்கில் மடேடார் எனப்படும் வீரன் பகட்டான உடை அணிந்து கையில் சிகப்புத் துப்பட்டாவும் வாளும் ஏந்தியபடி நிற்பார். வெறி ஏற்றப்பட்ட காளையை அவர் மீது மோத விடுவார்கள். மடேடார் என்ற வீரர் அந்தக் காளையை உசுப்பிவிட்டு ஓட்டம் காட்டிக் களைப்படையச் செய்து, கடைசியில் அதைக் கொல்லுவார். இதை நேரில் பார்த்தால்தான் மடேடாரின் லாகவமும், ஒயிலும், திறனும் கண்டு மகிழ முடியும்.

''மே ஐந்தாம் தேதி எங்கள் நாட்டில் ஒரு பெரிய திருவிழாக் கொண்டாடுவோம். 1862-ல் பிரெஞ்சுக்காரர்களை ஸ்பானியர்கள் வெற்றி கொண்ட தினம் அது. எங்களுடைய சுதந்திர தின விழாவை செப்டம்பர் பதினைந்து, பதினாறு தேதிகளில் கொண்டாடுகிறோம். அப்போது வாணவேடிக்கைகளும் ஊர்வலங்களும் நாடே அமர்க்களப்படும். மக்கள் எல்லாரும் கலந்து கொள்ளும் தேசியத் திருவிழா அது. குதிரைகள், போர் வீரர்கள் ராணுவ பாண்டு எல்லாம் ரொம்ப ரொம்பக் குதூகலமாக இருக்கும்.

''எங்களுக்குத் திருவிழா என்றாலே கொண்டாட்டமும் குஷியும்தான். விருந்து கிடைக்குமே. செயின்ட்ஸ் டேபியஸ்டா என்பது ஒரு திருவிழா. வாண வேடிக்கைகள் இரவு வானத்தைப் பகலாக்கும். சிறுவர் சிறுமியர் முட்டைகளின் ஓட்டை ஒருவர் தலையில் ஒருவர் அடித்து நொறுக்கி மகிழ்வர். நவம்பர் இரண்டாம் தேதி இறந்தவர்களின் நாள் என்று ஒரு பண்டிகை. குழந்தைகள் பயங்கரமான முகமூடிகளை அணிந்து ஊர்வலம் வருவார்கள்'' என்று பண்டிகைகளைப் பற்றி விளக்கிய பெர்னாண்டஸும் மரியாவும் கிட்டுவையும் பட்டுவையும் அழைத்துப் போனார்கள், கழுதை சவாரி செய்தபடிதான்.

கிராமத்து மக்கள் சிவந்த மேனியராக இல்லை. சற்றே கருத்த நிறத்துட





மெக்ஸிகோவைச் சுற்றி வரும் உங்களுக்கு அந்த நாட்டுடன் தொடர்புடைய ஒரு விளையாட்டு இதோ இங்குள்ள ஆங்கில எழுத்துக்களின் அருகேயுள்ள புள்ளிகளை 'A'யிலிருந்து ஆரம்பித்து 'Z' வரை சேருங்கள். மற்றொரு படத்தில் 1லிருந்து ஆரம்பித்து 33 வரை புள்ளிகளைக் கோடுகளால் இணையுங்கள். கிடைக்கும் காட்சி மெக்ஸிகோ நாட்டோடு தொடர்புடையதாக இருக்கும் பாருங்கள்.

னிருந்தனர். தலைமுடி நல்ல கறுப்பாக இருந்தது. முதல் இரண்டாவது நூற்றாண்டுகளில் மெக்ஸிகோவில் பல்வேறு செவ்விந்திய இன மக்கள் வாழ்ந்தார்களாம். ''எங்கள் தேசத்தின் சரித்திரம் ரொம்பச் சுவையானது. சுவாரஸ்யமானதும் கூட. இங்கு வாழ்ந்த புராதன மக்கள் மிகச் சிறந்த கலைஞர்கள். நாகரிகம் உடையவர்கள். அவர்கள் உருவாக்கிய கோயில்களும், அரண்மனைகளும் இன்னும் கூட அவர்களின் புகழ் பரப்பிக் கொண்டிருக்கின்றன. ஸ்டெக் என்ற இனத்தவர்தான் மெக்ஸிகோ நகரை ஒரு தீவின் நடுவில் நிர்மாணித்தார்கள்.

''மெக்ஸிகோ இன மக்கள் அநேகமாக எல்லாருமே ஆலிவ் நிறத்தவர்கள்'' என்றாள் மரியா.

''செவ்விந்தியர்களின் சந்ததிகளா நீங்கள்?'' என்று கேட்டாள் பட்டு.

''செவ்விந்தியன் என்ற வார்த்தை இப்போது' இங்கே ஏழை எளிய மக்களையே குறிக்கிறது. இந்திய இன மக்கள் இப்போதும் கிராமங்களிலேயே வாழ்கிறார்கள். வெறுங் காலுடனோ அல்லது தாங்களே தயாரித்த முரட்டுச் செருப்பணிந்தோ தான் நடப்பார்கள் கல்வி அறிவில்லாதவர்கள். வெறும் தரையில்தான் படுப்பார்கள். பைஜாமா போன்ற தொளதொளப்பான ஆடை அணிந்திருப்பார்கள். இவர்களின் வீடுகள் சேற்றாலும் வைக்கோலாலும் கட்டப்பட்டிருக்கும்.''


''செங்கல் கட்டிடம் கிடையாதா?''

''இங்கு செங்கல்லைச் சூளையிலே சுட மாட்டார்கள். வெயிலிலே காய வைத்து விடுவார்கள். அவ்வளவே''! என்றான் பெர்னாண்டஸ்.

''நீங்கள் ஏன் ஸ்பானிய மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டான் கிட்டு.

''கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததற்குப் பல்லாண்டுகளுக்குப்பின் கார்டஸ் என்ற ஸ்பானிய தளபதி மெக்ஸிகோ வந்து இறங்கினான். இங்குள்ள தங்கம், மற்றும் புதையல் பொருள்களை அள்ளிக் கொண்டு போய் ஸ்பெயினின் மன்னனுக்குச் சமர்ப்பிப்பதே கார்ட்டஸ் மற்றும் அவருடன் வந்த வீரர்களின் நோக்கம்.

''அஸ்டக் மக்கள், வெள்ளை வெளேர் என்றிருந்த கார்ட்டஸையும், அவருடன் வந்தவர்களையும் கண்டு பிரமித்துப் போயினர். அவர்கள் குதிரை மீது வருவதைக் கண்டார்கள். அதற்கு முன்பு அவர்கள் குதிரைகளைப் பார்த்ததில்லை. ஸ்பானியர்களைக் கடவுள் என்று எண்ணி மயங்கினார்கள். ஆனால் கார்ட்டஸோ அஸ்டக் மக்களையும் அவர்கள் அரசனையும் கொன்று, பொன்னையும் பொருளையும் கொள்ளையடித்துக் கொண்டு போனார். இந்தியர்களை அடிமையாக்கியும், தம் நாட்டுக்கு இழுத்துப் போனார். முந்நூறு ஆண்டுகள் ஸ்பெயின் எங்களைக் கொடுங்கோலாட்சி புரிந்தது. நாங்கள் புரட்சி செய்ததும் சுதந்திரம் பெற்றதும் பெரிய கதை. ''மெக்ஸிகோவின் அமைப்பும் வாழ்வும் விசித்திரமானவை. இங்கு வரட்சியையும் காணலாம், செழிப்பையும் பார்க்கலாம். பின்தங்கியவர்களையும் முன்னேறியவர்களையும் ஏழையையும் பணக்காரனையும் காணலாம். பல்வேறு நாட்டு மக்களையும் கலாசாரங்களையும் இங்கு கதம்பமாகக் காண முடியும்.



எலும்பைக் கண்டால் நாய்க்குக் குஷியாயிற்றே. ஆனால் அதை அடையும் வழிதான் அதற்குத் தெரியவில்லை. பென்சில் முனையால் அதை அந்த எலும்புத் துண்டினிடம் அழைத்துப் போகிறீர்களா?

நில நடுக்கம் எங்கள் நாட்டில் அடிக்கடி நிகழும் சகஜமான ஒரு நிகழ்ச்சி.

''இன்று மெக்ஸிகோ அமைதியோடு வாழும் ஒரு குடியரசு. சிறு கிராமங்களிலும் முன்னேற்றத்தைக் காண முடியும். கிராமந்தோறும் குடிநீர்க் கிணறுகள் உண்டு. வீடுகளில் எண்ணெய் விளக்கானாலும் கிராமப் பள்ளிகளில் மின்சாரம் உண்டு.''

கழுதையைக் காலால் தட்டி ஓட்டிக் கொண்டே பேசியபடி மறுபடி பியூப்லா நகரத்துக்கே வந்து சேர்ந்தார்கள் கிட்டுவும் பட்டுவும். அதற்கு முன்பே பரமேசுவரத் தாத்தா அங்கு வந்து காத்திருந்தார்.

விடைபெறும் வேளை வந்தபோது கிட்டு ஒரு சந்தேகத்தைக் கிளப்பினான். ''நாம் ஒரு விழா ஊர்வலத்தைப் பார்த்தோமே. அதில் ஜனங்கள் ஒரே மொழி பேசியதாகத் தெரியவில்லையே. ஸ்பானிய மொழி மட்டும்தான் உங்கள் தாய்மொழியா அல்லது...'' இழுத்தான்.

பெர்னாண்டஸ் சிரித்துக் கொண்டே பதில் கூறினான்: ''பழங்கால மக்கள் தங்கள் புராதன இந்திய மொழியையே இன்றும் பேசுகிறார்கள். நாடு முழுதும் ஐம்பது மாறுபட்ட மொழி பேசுவோர் இருக்கின்றனர்.''

''அடுத்த தடவை வரும் போது ஸோசீ மீகோவின்போது, வாருங்கள். ரொம்ப அற்புதமாக இருக்கும்'' என்றான் மரியா.

''அப்படியென்றால் அது என்ன?'' இது பட்டு.

''அது ஒரு பெரிய பண்டிகை. மலர்த் திருவிழா. பெரிய பெரிய தோட்டமே நகர்ந்து செல்வது போல் அலங்காரப் பூங்காக்கள் (வண்டிகள்) பவனி வரும்.''

''உங்கள் பண்டைய சரித்திரத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எனக்கு ஆவலாக உள்ளது' என்றான் கிட்டு.

உடனே பரமேசுவரத் தாத்தா. ''அது ரொம்பப் பெரிசு. நான் ஓரளவு ஆராய்ச்சி செய்து விட்டேன். விவரமாக நானே கூறுகிறேன், அவர்கள் பண்டைய நாகரிகத்தைப் பற்றி. இப்போது கிளம்புங்கள்'' என்றார்.

''வணக்கம் என்பதற்கு என்ன ஸ்பானிய வார்த்தை தாத்தா?'' என்று கேட்டாள் பட்டு. அது மரியாவின் காதில் விழுந்து விட்டது. ''அட்யூ' என்றால் 'குட்பை' என்று பொருள். மெக்ஸிகோவிடம் யாரும் அட்யூ கூற விரும்புவதில்லை. 'ஹாஸ்டா லா விஸ்டா' என்று சேர்த்துச் சொல்வதையே விரும்புவார்கள். மறுபடியும் நாம் சந்திக்கும் வரை என்று பொருள் அதற்கு'' என்றாள் மரியா.

''அட்யூ லா' விஸ்டா'' என்று கூறி பெர்னாண்டஸிடமும் மரியாவிடமும் பிரியாவிடை பெற்றார்கள் கிட்டுவும் பட்டுவும்.

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press Guindy, Madras-600032.
Editor: K. R. Athmanathan
GOKULAM FORTNIGHTLY, GUINDY, MADRAS-600032

Registered No. M 6040
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 50 மலேசியாக்காசு



மகிழ்ச்சியில் திளைத்திட
பிரித்துச் சுவையுங்கள்
Parry's
பைன் ஆப்பிள், ஆரஞ்சு,
லைம், ஸ்ட்ராபெர்ரி,
மாங்கோ லிக்கர்கள் ...
தித்திக்கும் அத்தனையும்
உங்கள் மகிழ்ச்சிக்
காகவே.
Parry's
மிட்டாய்கள், டாஃபிகள்
பாரீஸ் கன்பெக்ஷனரி லிமிடெட்

PRS 2771